'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 68 சோபகிருது வருடம், புரட்டாதி மாதம் 08ஆம் திகதி திங்கட்கிழமை (25.09.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 09, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## தியாகி திலீபனுக்கு சந்தோஷ் அஞ்சலி



02பக்கம்

## எக்ஸ்பிரஸ் பேர்ள் இழப்பீடு வந்தது



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கான இடைக்கால இழப்பீட்டுத் தொகை நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 878,650.53 அமெரிக்க டொலர் இடைக்கால இழப்பீடாக கிடைக்கப் பெற்றுள்ளது.

எஞ்சிய 16 மில்லியன் ரூபா கொடுப்பனவு கிடைக்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 02 பக்கம்



சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு மஹரகம இளைஞர் சேவைகள் மன்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் திருமதி ஜூலி சங் நிகழ்வில் கலந்துகொண்டோருடன் உரையாடுகிறார்.

## புல்மோட்டை கிராம மக்களின் பூர்வீகக் காணிகள் அபகரிப்பு

### அரிசிமலை விகாரை பிக்குவுடன் மக்கள் முறுகல்

புல்மோட்டை அரிசி மலை பகுதியில் இராணுவம் மற்றும் கடற்படையின் ஆதரவோடு புதிய பௌத்த விகாரை அமைத்துவரும் பனாமுரே திலகவங்ச என்ற பௌத்த பிக்குவும் அவரது சகோதரரும் இணைந்து புல்மோட்டை பகுதியில் முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான காணிகளை தொடர்ச்சியாக அத்துமீறி அபகரித்து, அங்கே டோசர் இயந்திரங்களைக் கொண்டு சுத்திகரிக்கும் செயலில் ஈடுபட்டு வருவதாக புல்மோட்டை கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை (22) புல்மோட்டை பகுதியில் உள்ள புல்மோட்டை... 02 பக்கம்



# சீனக்கப்பல் வந்தே தீரும்!

### பயணத்தை ஒத்திவைக்கக்கோரும் கொழும்பின் கோரிக்கையை நிராகரித்து பீஜிங் விடாப்பிடி

சீன சியாங் 6 கப்பலின் இலங்கைக்கான பயணத்தை ஒத்தி வைக்குமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை சீனா ஏற்றுக்கொள்ளவில்லையென உயர் மட்ட இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கப்பல் எதிர்வரும் 28ஆம் திகதி இலங்கை கடற்பரப்பில் இலங்கைக்குள் பிரவேசிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.



ஒக்டோபர் 1ஆம் திகதி சீனக் குடியரசு தினத்தை முன்னிட்டு சியாங் 6 கப்பல் இலங் கைக்கு வரவுள் ளதாக பல தரப்பில் கருதப்ப டுகிறது.

எவ்வாறாயினும், இந்த சீனக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும், இந்நாட்டில் உள்ள பல பொறுப்பான நிறுவனங்கள் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால் இலங்கையை மையமாகக் கொண்ட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மற்றுமொரு சர்வதேச இராஜதந்திர நெருக்கடி உருவாகியுள்ளது. 02 பக்கம்

## மலேசியாவில் 03 இலங்கை இளைஞர்கள் படுகொலை

### 02 இலங்கையர்கள் தலைமறைவு



மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் செந்தூல், ஜாலான் பெர்ஹெண்டியன் கம்பங் கோவில் ஹிலிரில் உள்ள ஒரு வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு இலங்கையைச் சேர்ந்த ஆண்கள் மூவர் கை, கால்கள் கட்டப்பட்டு பொலித்தீன் பையால் தலை மூடியநிலையில் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர்.

இந்த கொலைகளுடன் இருவருக்கு தொடர்பு இருப்பதாகவும் சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு பொலிஸார் சென்றடைவதற்கு முன்னதாகவே இலங்கையைச் சேர்ந்த அவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் கோலாலம்பூர் பொலிஸ் கமிஷனர் டத்தோ அலாவுதீன் அப்துல் மஜீத் தெரிவித் தார்.

இரவு 11 மணியளவில் நான்கு மாடி கடைவீதியில் உள்ள ஒரு வீட்டில் சண்டை நடந்ததாக பொதுமக்களிடமிருந்து பொலிஸாருக்கு அழைப்பு வந்தது.

அந்த வீட்டின் இரண்டாவது மாடியில் மூன்று ஆண்கள் இறந்து கிடந்தனர். அவர்கள் அனைவரும் அவ்வீட்டின் களஞ்சிய அறையில், அவர்களின் வலது... 02 பக்கம்

## 957 வைத்தியர்கள் சேவை விலகல்




இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 957 வைத்தியர்கள் சேவையிலிருந்து விலகியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கோபா குழுவில் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

05 வருட கடமை விடுப்பு பெற்று வெளிநாடு செல்வதற்காகவே பெரும்பாலான வைத்தியர்கள் சேவையில் இருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 02 பக்கம்

## பிறந்தநாளை கொண்டாட முயன்று பள்ளத்தில் விழுந்த இளைஞர்கள்

### மடுல்சீமையில் சம்பவம்

கே.சுபானி



மடுல்சீமை சிறிய உலகமுடிவு பகுதியிலுள்ள பள்ளத்தாக்கில் வீழ்ந்து படுகாயமடைந்த இருவர் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மடுல்சீமை பொலிஸார் தெரிவித்துள்ளனர். 02 பக்கம்

### கமெண்ட் சுந்தர்...



எங்களை நம்பி உள்ளூர் வங்கி கடன் கொடுக்காவிட்டாலும் எங்களுக்கே தெரியாமல் உலகமே கடன் கொடுத்திருக்குது எண்டால் பாருங்கோவன் எங்கட பெறுமதிய..

## நாட்டிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் தலா ரூ.47 இலட்சம் கடனாளிகள்

### ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்



நாட்டில் நான்கு பேர் கொண்ட ஒவ்வொரு குடும்பமும் 47 இலட்சத்து 24ஆயிரம் ரூபா கடனாளியாகியுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர்களான வசந்த அத்துகோரள மற்றும் ஓ.ஜி.தயாரத்ன பண்டா ஆகியோரால் நடத்தப்பட்ட... 02 பக்கம்

## பயங்கரவாத எதிர்ப்பு, நிகழ்நிலை காப்பு சட்டமூலங்களை மீளப்பெற வலியுறுத்தல்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் நிகழ்நிலை காப்பு சட்டமூலங்களை வன்மையாகக் கண்டிப்பதாக சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கைமூலம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இரண்டு சட்டமூலங்களையும் உடனடியாக மீளப்பெற வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் குறித்து தற்போது வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தில் கவனத்திற்கொள்ளப்படவில்லை என சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. 02 பக்கம்

ශ්‍රී ලංකා නීතිඥ සංගමය
BAR ASSOCIATION OF SRI LANKA
இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

### உஷ்



சுகாதார அமைச்சர் பதவியில் இருந்து கெஹேலிய ரம்புக்வெல்ல இராஜினாமா செய்யவுள்ளார்.

அந்த பதவியை ரமேஷ் பத்திரணவுக்கு வழங்க ஜனாதிபதி ரணில் தீர்மானித்துள்ளார்.

கெஹேலியவுக்கு ஊடகத்துறை அமைச்சுப் பொறுப்பை வழங்க ஆலோசித்துவருகிறார் ரணில். எவ்வாறாயினும், சுகாதார அமைச்சு பொறுப்பை வேண்டாமென மறுக்கிறாராம் பத்திரண.




# யாரையும் தாக்கி காயப்படுத்த வேண்டாம்

## பொலிஸில் முறையிடக் கோருகிறது பொலிஸ்!

பல்பொருள் அங்காடிகளிலோ அல்லது வேறு கடைகளிலோ பொருட்களைத் திருடும் நபர்கள் மீது தாக்குதல் நடத்தப்படாது அவர்களைப் பற்றி அருகில் உள்ள பொலிஸாருக்கு அறிவித்து அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ கேட்டுக்கொள்கிறார்.

பொருட்கள் திருட்டு குறித்து விசாரணை நடத்த பொலிஸார் இருக்கும் போது, பொருட்களை திருடிய குற்றத்துக்காக யாரையும் தாக்க முடியாது என்றார்.

சட்டத்தை கையில் எடுத்துக்கொண்டு யாரையும் தாக்க எவருக்கும் உரிமை இல்லை எனவும் இது தொடர்பில் பல்பொருள் அங்காடிகளின் முகாமையாளர்கள் அனைத்து ஊழியர்களுக்கும் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொரளையில் உள்ள பல்பொருள் அங்காடியில் பொருட்களை திருடிய யுவதியை ஊழியர்கள் குழுவொன்று தாக்கும் காணொளி சமூக ஊடகங்களிலும் ஊடகங்களிலும் பரவி வருவதாகவும் தாக்குதல் சம்பவத்தை மன்னிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடையில் யாரேனும் பொருட் களை திருடிச் சென்ற தாக சந்தேகம் ஏற்பட் டால், அவர்களை தாக்குவது மாற்று வழி அல்ல என்றும் பணியாளர்கள் இது குறித்து பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தெரிவித்து அந்த நபரையோ பெண்ணையோ பிடித்து பொலிஸில் ஒப்படைக்க வேண்டும் என்றார்.

ஹங்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய யுவதி ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டதாகவும் அவர் போதைப் பொருளுக்கு அடிமையானவர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த பெண் போதைப்பொருள் பாவனைக்காக பொருட்களை திருடியுள்ளதாகவும் கடைகளில் பொருட்களை திருடியதற்காக இவருக்கு எதிராக பல வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# பெண் வாடிக்கையாளரை கொடூரமாக தாக்கிய பல்பொருள் அங்காடி ஊழியர்கள் ஐவர் கைது

பெண் வாடிக்கையாளரை கொடூரமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் பொரளையில் உள்ள முன்னணி பல்பொருள் அங்காடி விற்பனை நிலையத்தின் பணியாளர்கள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு பல்பொருள் அங்காடியின் ஊழியர்கள் ஒரு பெண் வாடிக்கையாளரை கொடூரமாக தாக்குவதைக் காட்டும் வீடியோ சமூக ஊடகங்களில் வைரலானதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

ஹங்வெல்ல பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. எனினும் பொரளையில் உள்ள விற்பனை நிலையமொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பின்னர் தெரியவந்துள்ளது.

விற்பனை நிலையத்திலிருந்து பல ஆண் மற்றும் பெண் ஊழியர்கள் வாடிக்கையாளரை கொடூரமாக தாக்குவது சிசிரிவி காட்சிகளில் பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் செப்டெம்பர் 18 ஆம் திகதி நடந்ததாக கூறப்படுகிறது. இருப்பினும், சமூக ஊடகங்களில் வீடியோ வைரலாகும் வரை எந்த புகாரும் பதிவு செய்யப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பல்பொருள் அங்காடி நிர்வாகமும் முன்னதாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.அத்துடன் நடந்த சம்பவம் தொடர்பில் மேற்படி நிறுவனம் பகிரங்க வருத்தம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சூட்கேஸ் நிறைய பணம்...

# உங்கள் கஷ்டத்தை உணர்ந்து தருகிறேன் என்றார் சந்திரிகா

## ஆனந்தசங்கரி வெளியிட்ட தகவல்



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா என்னை அழைத்து மேசையில் பணக்கட்டுகள் நிரப்பிய சூட்கேசை வைத்து, எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். இவ்வாறு தெரிவித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் யாழ்ப்பாண ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் கூறியதாவது ,

நான் விரைவில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளேன். அரசியல் வாழ்க்கையில் நான் சொன்னதாக ஒரு பொய், நான் செய்த அநியாயம், யாரிடம் கொள்ளையடித்தேன், யாரிடம் பணம் வாங்கினேன் என ஒன்றை யாராவது ஒரு அரசியல் தலைவரால் சுட்டிக்காட்ட முடியுமா?. ஆனால் இப்பொழுதுள்ள அரசியல்வாதிகள் ஒவ்வொருவரைப் பற்றியும் சொல்ல முடியும்.

சம்பந்தர் கட்சியை கிளப்பிக் கொண்டு சென்ற பின்னர் நான் காணியை விற்று, சொந்தப்பணத்தை செலவிட்டே கட்சியை நடத்துகிறேன். ஆக, வெளிநாட்டிலுள்ள 3 பேர் மாத்திரமே ரூ.50,000 வீதம் கட்சிக்கு பணம் தந்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு தேர்தலில் நான் சுயேச்சையாக தேர்தலில் போட்டியிட்ட போது, சந்திரிகா என்னை அழைத்தார். மேசையில் ஒரு சூட்கேஸை வைத்தார். "ஆனந்தசங்கரி உங்களை டிமாண்ட் பண்ண பணம் தரவில்லை. உங்கள் கஷ்டம் தெரியும். இது எமது தேர்தல் செலவுக்காக சேர்த்த பணத்தில் உங்கள் சேவைக்காக தருகிறேன்" என்றார்.

"எனக்கு பணம் தேவைதான். ஆனால் இதை எடுக்க மாட்டேன்" என கூறிவிட்டு வந்தேன்.

2004ஆம் ஆண்டு தேர்தலில் நான் தோல்வியடைந்து விட்டேன். சந்திரிகா என்னை அழைத்தார். "தமிழ் ஜனநாயகத் தலைவர் ஒருவர் பாராளுமன்றத்துக்கு வர வேண்டும். உங்களை தேசியப்பட்டியலில் நியமிக்கிறேன்" என்றார். எனது நாணயத்தை இழக்க தயாராக இல்லையென கூறினேன்.

சந்திரிகா அப்படி சொன்னதன் அர்த்தம், அப்போது தேர்தலில் வெற்றியடைந்து பாராளுமன்றம் சென்ற 22 பேரும் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்படவில்லை யென்பதே.

2 வாரங்களின் பின்னர் மீள அழைத்து, பதவியேற்குமாறு கேட்டார். நான் மறுத்துவிட்டேன். "நீங்களும் உங்கள் அரசியலும்" என திட்டினார்.

இதற்கெல்லாம் தமிழ் சமூகத்தில் யாரும் என்னை பாராட்ட மாட்டார்களா?

தற்போதுள்ள அரசியல்வாதிகளில் யாராவது இப்படியொரு சம்பவம் சொல்ல முடியுமா? கோடி கோடியாக வாங்கி பொக்கற்றுக்குள் போட்டுக்கொண்டு வருகிறார்கள் என்றார் சங்கரி .

# களுபோவில வைத்தியசாலையில் இரட்டைக் குழந்தைகளின் மரணம்

## சம்பவம் தொடர்பில் ஆராய குழு

களுபோவில போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த இரட்டைக் குழந்தைகள் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று கெஸ்பேவ பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இதற்கு மருத்துவமனை ஊழியர்களின் அலட்சியமே காரணம் என குழந்தைகளின் பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

ஹொன்னந்தர சர்வோதய மாவத்தை, கெஸ்பேவ பகுதியைச் சேர்ந்த அகிலா போனிபஸ் என்பவர் கடந்த 8ஆம் திகதி பிரசவத்துக்காக களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மறுநாள் இரட்டைக் குழந்தைகளை அவர் பிரசவித்த நிலையில், குழந்தைகள் குறைமாத குழந்தை சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டன.

அக்குழந்தைகளுள் ஒரு ஆண் குழந்தை கடந்த 19ஆம் திகதி உயிரிழந்த நிலையில், சுவாசக் கோளாறு காரணமாக குழந்தை உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அதன் பின், மற்ற குழந்தைக்கு பாலூட்ட சென்றபோது அந்தக் குழந்தையும் உயிரிழந்தமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, இச் சம்பவங்கள் தொடர் பாக குழந்தைகளின் பெற்றோர் கொஹுவல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளனர்.

இது தொடர்பில் களுபோவில போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சாகரி கிறிவந்தெனிய தெரிவிக்கையில், சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் பிரகாரம், இது தொடர்பில் ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

## பயங்கரவாத எதிர்ப்பு...

மக்களின் கருத்துகளைப் பெறாமல் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலத்தின் ஊடாக மக்களுக்கு பொறுப்புக்கூறுதல், வெளிப்படைத்தன்மையுடன் செயற்படல் என்பவற்றை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாவதாக சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பயங்கரவாதம், தவறான அறிக்கைகள், அதனுடன் தொடர்புடைய தவறான விளக்கங்கள் ஆகியவற்றின் வரையறைகள் இரண்டு சட்டமூலங்களிலும் மிகவும் சிக்கலான தாகக் காணப்படுவதாக சட்டத்தரணிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மக்களின் இயல்பான செயற்பாடுகள் மீது நிர்வாகக் கட்டுப்பாட்டை உருவாக்கி , கடுமையான சட்டங்களைத் திணிக்கும் இந்த சட்டமூலங்கள் விரும்பத்தகாத, தன்னிச்சையான முயற்சி என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சட்டமூலங்களும் நீதித்துறையின் விடயங்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படுவதாக சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மக்களின் மீற முடியாத சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு சட்ட வல்லுநர்களுக்கு இருப்பதையே அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஒன்றுகூடல், பேச்சு, கருத்து மற்றும் சிந்தனை சுதந்திரத்தை பறித்து, நிறைவேற்று அதிகாரத்துக்கு வரம்பற்ற அதிகாரங்களை வழங்கும் இத்தகைய சட்டங்கள், அரசியலமைப்பின் கீழ் மக்களின் இறையாண்மையை ஆக்கிரமிப்பதாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சீனக்கப்பல் வந்தே தீரும்!...

எனினும், கப்பலால் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளதைக் கண்ட இலங்கை அரசு, சீனக் கப்பலின் பயணத்தை வரும் நவம்பர் மாதம் வரை தள்ளி வைக்க சீனாவிடம் கோரிக்கை விடுத்தது. ஆனால் இலங்கை அரசின் கோரிக்கையில் சீனா அதிக அக்கறை காட்டவில்லை என்று அறியமுடிகின்றது.

இதேவேளை, ஷி யாங் 6 கப்பல் தற்போது இந்தியப் பெருங்கடலில் உள்ள இந்திய பிரத்தியேக பொருளாதார வலயத்தை நெருங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இலங்கையை நோக்கி வந்த இந்தக் கப்பல் வியாழன் வரை இந்தியாவின் நிக்கோபார் தீவுகளுக்கு அருகில் மெதுவான வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்ததாக சர்வதேச கப்பல் தரவுகள் சொல்கின்றன.

**நோக்கம்**

ஷி யான் 6 எனும் சீன ஆய்வுக் கப்பல் தென் சீனத் துறைமுகத்தில் இருந்து இந்திய பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் ஆய்வுகளை முன்னெடுக்கும் வகையிலேயே இந்த பயணத் தை ஆரம்பித்துள்ளது.

சீன அறிவியல் கல்வியகத்தின் கீழ் தென் சீனக் கடல் ஆய்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த ஆய்வுக் கப்பல் 12,000 கடல் மைல்களுக்கும் அதிகளவான பரப்பில் பயணிக்கவுள்ளது.

இந்த ஆய்வுக் கப்பல் 80 நாட்கள் கடல் பரப்பில் இயங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் 13 ஆய்வுக் குழுக்களின் 28 அறிவியல் ஆய்வுத் திட்டங்கள் அடங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

இந்த 'ஷி யான் 6' ஆய்வு கப்பலை இலங்கையில் நங்கூரமிடுவதற்கு சீன அரசு சென்ற வருடம் (2022) அனுமதி கோரியிருந்தது.

60 பேரைக் கொண்ட ஷி யான் 6 அறிவியல் ஆராய்ச்சிக் கப்பலானது கடல்சார்வியல், கடல் புவியியல் மற்றும் கடல் சூழலியல் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தது.

தவிரவும் இந்தக் கப்பல் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களில் நங்கூரமிட திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நாரா எனப்படும் தேசிய நீரியல் வளங்கள் மற்றும் ஆராய்ச்சி முகவர் நிறுவனத்துடன் இணைந்து இலங்கையின் நீர்நிலைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஷி யான் 6 ஆய்வுக் கப்பலுக்கு பாதுகாப்பு அமைச்சு ஏற்கனவே அனுமதி வழங்கியது.

நாரா நிறுவனம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாகவே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சீனக் கப்பல் சர்ச்சை காரணமாக ஏற்க னவே இலங்கை வரவிருந்த இந்திய பாதுகாப் பமைச்சர் ராஜ்நாத் சிங் தனது பயணத்தை ஒத்திவைத்தார்.இப்போது ஒக்டோபரில் கொழும்பில் நடைபெறவுள்ள Indian Ocean Rim Association (IORA) மாநாட்டுக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர் வருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.ஆனாலும் அந்த விஜயம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் இழப்பீடு...

குறித்த தொகையானது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் செலவுகளுக்காகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

கப்பல் நிறுவனத்துக்கான காப்புறுதி நிறுவனத்துடன் அண்மையில் ஏற்படுத் திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய குறித்த இடைக்கால இழப்பீட்டுத் தொகை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காகவும் இழப்பீடு கோரப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் குறித்த காப்புறுதி நிறுவனம் ஆராய்ந்து வருவதாக சட்ட மா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டிலுள்ள ஒவ்வொரு...

சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

அரசாங்கம் பெற்றுள்ள வரம்பற்ற கடன்களி னால் இவர்கள் கடனாளிகளாக மாறியுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இதன்படி, இந்த ஆண்டு ஏப்ரல் வரை தனிநபர் கடன் தொகை பதினொரு இலட்சத்து பதினெட் டாயிரம் ரூபா என்றும் தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் தனி நபர் கடன் ஆறு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் ரூபாவாக இருந்தது. இந்த ஆண்டு தனிநபர் உள்நாட்டு கடன் தொகை 6 இலட்சத்து தொண்ணூற்று நான்காயிரம் ரூபா என்றும் வெளிநாட்டு கடன் தொகை 4 இலட்சத்து தொண்ணூற்றாயிரத்து எழுநூற்று இருபது ரூபா என்றும் தெரிவித்தார்.

## தியாகி திலீபனுக்கு...

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவிடத்துக்கு தனது மனைவியுடன் சென்று நேற்று (24) அஞ்சலி செலுத்தினார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வருகை தந்துள்ள இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் நேற்று மாலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கலைஞர்களை யாழில் உள்ள விருந்தினர் விடுதியில் சந்தித்து கலந்துரையாடினார்.அதற்கு முன்னதாகவே அவர் திலீபன் நினைவேந்தலில் அஞ்சலி செலுத்தினார்.

சந்தோஷ் நாராயணனின் மனைவி மீனாட்சி சந்தோஷ் யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்தோஷ் நாராயணன் பிரமாண்ட இசை நிகழ்வொன்றை நடத்தவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. முன்னதாக செப்டெம்பர் 30ஆம் திகதி சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டு எதிர்வரும் ஒக்டோபர் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் மாலை 4 மணிக்கு சந்தோஷ் நாராயணன் பங்கேற்கும் யாழ். கானம் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலேசியாவில் 03 இலங்கை...

கைகள் மற்றும் கால்கள் ஒன்றாக இணைக்கப் பட்டு, அவர்களின் தலைகள் பொலித்தீன் பையால் சுற்றப்பட்ட நிலையில் காணப்பட்டன என நேற்று செந்தூல் பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கூறினார். அவர்களுள் ஒருவரின் சடலம் நிர்வாணமாக காணப்பட்டது.

வீட்டைச் சோதனை செய்ததில், 40 வயதுடைய இலங்கைத் தம்பதி வீட்டை வாடகைக்கு எடுத்திருந்தது தெரியவந்தது. பலியான மூன்று பேரில், அந்த தம்பதியின் 20 வயது மகனும் உள்ளடங்குகிறார்.

இலங்கை தம்பதியர் விசாரணைக்கு உதவுவதற் காக கைது செய்யப்பட்டனர். அவர்கள் 7 நாட்கள் தடுத்து வைக்கப்படுவார்கள்.கொல்லப்பட்ட ஏனைய இரு இலங்கை இளைஞர்களும் அந்த வளாகத்தில் அறையொன்றை வாடகைக்குப் பெற்று தங்கியிருந்தவர்கள். உயிரிழந்த இவர்கள் மூவரும் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்டவர்கள். இந்த படுகொலையின் முக்கிய சந்தேகநபர்கள் இருவர் தப்பியோடியுள்ளனர் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் இருந்து கத்தி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.

தலைமறைவாகியுள்ள சந்தேகநபர்கள் இருவரும் கொலையுண்ட ஒரு இளைஞனின் பெற்றோருடன் பழகியவர்கள் என்றும் ஆறு மாதங்களாக அவர்கள் அறிமுகமான நண்பர்களாக இருந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், இரு நாட்களாக அந்த வீட்டில் தங்கியிருந்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

## பிறந்தநாளை கொண்டாட...

இவ்வாறு படுகாயமடைந்த இருவரும் பசறை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர்கள் எனத் தெரியவந்துள்ளது.மேற்படி இளைஞர்களுள் ஒருவர் நேற்று முன்தினம் (23) பிறந்தநாள் கொண்டாடிய நிலையில் அவர், அவருடைய நண்பர்கள் நால்வருடன் மடுல்சீமை, எலமான் பகுதியில் அமைந்துள்ள சிறிய உலக முடிவு பகுதிக்கு அருகிலுள்ள ராகல சானுவ என்ற இடத்துக்குச் சென்றுள்ளார்.

அங்கு சென்ற அவர்கள் மது விருந்தில் ஈடுபட் டிருந்தநிலையில், அன்றைய தினம் பிறந்தநாள் கொண்டிய இளைஞன் பாறையிலிருந்து தவறி பள்ளத்தாக்கில் வீழ்ந்துள்ளார். இந்நிலையில் அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்த அவருடைய நண்பரும் பள்ளத்தாக்கில் வீழ்ந்த நிலையில் இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து காயமடைந்த இருவரும் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து பதுளை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவின் வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷவிடம் வினவியபோது, பதுளை பொது வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8.30 மணியளவில் காயமடைந்த நிலையில் இருவர் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவர் பலத்த காயமடைந்த நிலையிலும் மற்றுமொருவர் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என தெரிவித்தார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மடுல்சீமை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## புல்மோட்டை கிராம மக்களின்...

இல 01 கிராம அலுவலர் பிரிவிலுள்ள 06 முஸ்லிம் குடும்பங்களுக்குச் சொந்தமான விவசாயக் காணிகளை அபகரித்து, கனரக இயந்திரங்களைக் கொண்டு அபகரிக்கும் நடவடிக்கைகளில் குறித்த பிக்கு ஈடுபட்டுள்ளார்.

இதனையறிந்த காணி உரிமையாளர்கள் தமது காணிக்குள் சென்று அத்துமீறல், அபகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவதை நிறுத்து மாறும் காணிக்கான ஆவணங்கள் தம்மிடம் உள்ளன என்றும் பாரம்பரியமாக தாம் விவசாயம் செய்துவரும் நிலங்களை விட்டு வெளியேறுமாறும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கனரக இயந்திரத்தோடு அப்ப குதிக்கு வந்து அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட் டிருந்த அரிசிமலை பௌத்த பிக்கு பனாமுரே திலகவங்ச இந்த பகுதி பௌத்த விகாரைக்கு சொந்தமான பகுதி என்று தெரிவித்ததோடு, இந்த காணி வர்த்தமானியில் பௌத்த விகாரைக்கான இடம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார்.

அவ்வேளை, காணி உரிமையாளர்கள் இது தமது பூர்வீக காணி என தெரிவித்து, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது கனரக இயந்திரத்தின் சாரதியான பௌத்த பிக்குவின் சகோதரர் சம்பத் என்பவர் கனரக இயந்திரத்தின் முன்பகுதியால் காணி அபகரிப்புக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளிப்படுத்திய பெண்களை மோதும் விதமாக அச்சுறுத்தியுள்ளார்.

அவ்வேளை, கனரக இயந்திரத்தின் முன்பகு தியால் மோதுண்டு காணி உரிமையாளரான பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சம்சுதீன் சுலைகா (வயது 42) என்ற பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரிசிமலை பௌத்த பிக்குவின் ஆதரவில் பல்வேறு பௌத்த பிக்குகள் இணைந்து குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் தொடர்ச்சியாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு சொந்தமான காணிகளை அபகரித்து, பௌத்த விகாரைகளை அமைத்துவருவதோடு பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான காணிகள் என பல நூற்றுக்கணக்கான நிலங்களையும் அபகரித்து வருவதாக கூறப்படுகிறது.

## 957 வைத்தியர்கள்...

எவ்வித முன்னறிவித்தலுமின்றி பதவி விலகிய வைத்தியர்கள் பலர் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டை விட்டு வெளியேறும் வைத்தியர்கள் தொடர்பில் இன்று திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர், வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

ஐந்து வருட விடுமுறையில் வெளிநாடு செல்வது, சேவையிலிருந்து இராஜினாமா செய்தல், முன்னறிவித்தலின்றி இராஜினாமா செய்தல் மற்றும் குறிப்பிட்ட சேவைக் காலம் முடிந்து ஓய்வு பெறுதல் போன்ற காரணங்களால் இந்த வருடம் 957 வைத்தியர்களை சுகாதார அமைச்சு இழந்துள்ளது.

இந்நிலையில் சில சிகிச்சைப் பிரிவுகளில் 24 மணி நேர சேவைகளை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்றார்.

வைத்தியர்களின் சேவைக்கு உரிய பெறுமதி இன்மையே வைத்தியர்கள் வெளிநாடு செல்வதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பெருமளவான தாதியர்களும் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பயிற்சி தாதி புஷ்பா ரம்யானி டி சில்வா தெரிவித்தார்.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருந்துகளை கொள்வனவு செய்வது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குவதற்காக இரண்டு உப குழுக்களை நியமிப்பதற்கு குழுவின் தலைவர் லசந்த அழகியவண்ண நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருந்துகளைக் கொள்வனவு செய்வது தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்கு வதற்காக நியமிக்கப்பட்டுள்ள முதலாவது உப குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் இந்த உப குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்க ளான டயானா கமகே, அசோக அபேசிங்க, ஜயந்த கெட்டகொட மற்றும் ஹரினி அமரசூரிய ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் பிரதீப் உந்துகொட தலைமையில் இரண்டாவது உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் ஏனைய உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, விமலவீர திஸாநாயக்க, மஞ்சுள திஸாநாயக்க, வீரசுமன வீரசிங்க மற்றும் முதிதா பிரஷாந்தி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் மனிதவள முகாமைத் துவம், சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசா லைகள், நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைப்புகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட விடயங்களை இந்த உப குழு ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரண்டு உபகுழுக்களும் எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி கோபா குழுவுக்கு அழைக்கப்பட்டு அந்த குழுக்களின் விசாரணை கள் மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்து எதிர் காலத்தில் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக் கப்படும் என கோபா குழுவின் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

# வட்டுக்கோட்டையில் திலீபன் நினைவேந்தல்





சாவகச்சேரி நிருபர்

தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை(22) பிற்பகல் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை அலுவலகத்தில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது தியாக தீபம் திலீபனின் நினைவுருவ படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகைச் சுடரேற்றப்பட்டது.

தொடர்ச்சியாக பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் தியாக தீபத்தின் அஹிம்சை பயணம் குறித்த நினைவுரை ஆற்றப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி மகளிர் அணியினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்பியுள்ளார்.

துபாயில் இருந்து வந்த எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்கு சொந்தமான ஈ.கே. 650 விமானம் மூலம் நேற்றுக்காலை 8.30 மணியளவில் அவர் நாடு திரும்பினார்.

ஜி 77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்காக கடந்த 13ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபாவின் ஹவானாவுக்கு பயணமானார். கியூப விஜயத்தை நிறைவு செய்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்த அமர்வில் கலந்துகொள்வதற்காக கடந்த 17ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரை சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிதிக்குற்ற வழக்கு விசாரணைக்காக விசேட நீதிமன்றம் அமைய வேண்டும்

## இலங்கை மத்திய வங்கி

நிதிக்குற்ற வழக்கு விசாரணைகளுக்காக விசேட நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2021/22ஆம் ஆண்டுக்கான நிதி மோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவி குறித்த தேசிய இடர் மதிப்பீட்டு அறிக்கையின்பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவு இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

முறைசாரா வகையில் பணம் அனுப்புதல், உண்டியல் முறைமை என்பன நாட்டில் பண மோசடி செய்யும் அபாயகரமான முறைமையாக மாறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள பண மோசடி முறைகளில் ரியல் எஸ்டேட் முகவர்கள், வங்கித்துறை மற்றும் நிதி நிறுவனங்கள் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பண மோசடி என்பது நிதி சொத்துகளை சட்ட விரோதமாகப் பெறுதல் மற்றும் சம்பாதிக்கப்பட்ட முறைமை என்பவற்றை வெளியிடாமல் பயன்படுத்துவதைக் குறிக்கின்றது.

அதற்கமைய, இலங்கை மத்திய வங்கி தனது அண்மைய அறிக்கையில் பண மோசடி தடுப்பு தொடர்பான புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

# பங்களாதேஷிடம் பெற்ற கடனை வட்டியுடன் கொடுத்த இலங்கை



கடுமையான டொலர் தட்டுப்பாட்டிலிருந்து தப்பிப்பதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாணய மாற்று உடன்படிக்கையின் மூலம் பங்களாதேஷிடம் இருந்து பெறப்பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இலங்கை செலுத்தியுள்ளது.

கடந்த தவணையாக, இலங்கை கடந்த வியாழன் இரவு சுமார் 50 மில்லியன் டொலர் மற்றும் 4.5 மில்லியன் டொலர்களை கடனுக்கான வட்டியாக செலுத்தியதாக பங்களாதேஷ் வங்கியின் மூத்த அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

2021ஆம் ஆண்டு மே மாதம் ஒரு வருட காலத்துக்கு இந்த கடனை இலங்கை எடுத்தது. எனினும், மோசமான உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியது. பின்னர் நெருக்கடி முற்றிய நிலையில் இலங்கை அரசாங்கம் தன்னை வங்குரோத்தானதாக அறிவித்தது. அதனால்தான் கடனை அடைக்க இலங்கை பலமுறை காலஅவகாசம் எடுத்துக் கொண்டது.

பங்களாதேஷ் வங்கியின் கூற்றுப்படி, இலங்கை ஆரம்பத்தில் 50 மில்லியன் டொலர்களை ஓகஸ்ட் 20 அன்று திருப்பிச் செலுத்தியது. பின்னர் ஓகஸ்ட் 31 அன்று, அது 100 மில்லியன் டொலர்களை திருப்பிச் செலுத்தியது. இறுதியாக, வியாழன் இரவு மீதமுள்ள 50 மில்லியன் டொலர்களை திருப்பிக் கொடுத்தனர்.

பங்களாதேஷிடம் பெற்ற கடனை மூன்று தவணைகளில் இலங்கை செலுத்தியுள்ளது.

**சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் தேவைக்கான பண வரவு உண்டு. சுறுசுறுப்பாக செயற்படுங்கள்.

**ரிஷபம்:** எதிர்பாராத சுபச்செய்தியால் மனமகிழ்ச்சி உண்டு. தெய்வ தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** மௌனம்காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டாவாதம் செய்யவேண்டாம். கோபத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**கடகம்:** தொழிலிடத்திலுள்ள பெண் உத்தியோகத்தர்களால் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்களில் ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** உடல், மனம் சோம்பிக் காணப்படும். வீண் டென்ஷன் வேண்டாம். தொழில் விடயத்தில் அக்கறையோடு செயல்படுங்கள்.

**கன்னி:** தேவைக்கேற்பப் பணம் ஏதோ வழியில் வந்து மகிழ்விக்கும். குழப்பமற்ற மனதுடன் சேவை யாற்றுவீர்கள்.

**துலாம்:** திட்டமிட்டப் பயணங்களால் இலாபம் உண்டு. தாய் மற்றும் தாய்வழி உதவிகள், வாகனசுகம் உண்டு.

**விருச்சிகம்:** புத்திசாதுர்யமாக அனைத்திலும் வெற்றி காண்பீர்கள். அத்தியாவசியச் செலவுகள் இருக்கும்.

**தனுசு:** திடீர் பணவரவுக்கான வாய்ப்பு உள்ளது. வாதத் திறமையைக் காட்டுவீர்கள். குடும்பசுகம் உண்டு.

**மகரம்:** தேவையற்ற கவலைகளை விட்டுவிட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள். உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

**கும்பம்:** வீணான டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம், பொருட்களை பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள்.

**மீனம்:** தொட்டது துலங்கும் நாள். மனஅமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள். வெற்றியுடன் வீடுதிரும்புவீர்கள்.

**திதி:** தசமி மு.ப.7.56 வரை பின் ஏகாதசி
**நட்சத்திரம்:** உத்திராடம் மு.ப.11.55 வரை பின் திருவோணம்
**யோகம்:** மரண யோகம் பி.ப.1.22 பின் அமிர்த யோகம்
**வார சூலம்:** கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்ல நேரம்:** பி.ப.11.59 – 12.29 மணிவரை
**ராகுகாலம்:** 7.29 – 8.59 மணிவரை
**எமகண்டம்:** 10.29 – 11.59 மணிவரை
**குளிகை:** 1.29 – 2.59 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மிதுனராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** பரணி, பூரம், பூராடம் கார்த்திகை, உத்தரம், உத்தராடம் (பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** ஸ்மார்த்த ஏகாதசி விரதம் - திருவோணம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325 078-6759739

# அங்கவீனமுற்றோர் அமைப்பின் ஏழாவது வருட பூர்த்தி நிகழ்வு







ஆ.ரமேஸ்

நுவரெலியா மாநகர சபைக்கு உட்பட்ட அங்கவீனமுற்றவர்கள் அமைப்பின் ஏழாவது வருட பூர்த்தி விழா நுவரெலியா சினிடா பாடசாலையில் இடம்பெற்றது.

சனிக்கிழமை(23) காலை 11 மணிக்கு இந் நிகழ்வு நுவரெலியா பிரதேச அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் மற்றும் நுவரெலியா மாவட்ட சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் பொது மக்கள், ஊடகத் துறையினரின் பங்குபற்றுதலுடன் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் அங்கவீனர்களை கௌரவிக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் விசேட தேவையுடையவர்களின் நடனம் மற்றும் பாடல்கள் போன்றவை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட மதுபான போத்தல்களை ஏலத்தில் விற்கத் தீர்மானம்



சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 18 ஆயிரத்துக்கும் அதிகமான மதுபான போத்தல்களை ஏலத்தில் விற்பனை செய்ய இலங்கை சுங்கம் தீர்மானித்துள்ளது.

வருடத்தின் ஆரம்பம் முதல் சேகரிக்கப்பட்ட சட்டவிரோத மதுபான போத்தல்கள், அரசுடைமையில் இருந்ததாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

சுங்க வருமான கண்காணிப்பு பிரிவினால் ஏல நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதுடன் இது தொடர்பான கலந்துரையாடல்களை மதுவரி திணைக்களத்துடன் ஆரம்பித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஏலத்துக்கு விடப்படவுள்ள சட்டவிரோத மதுபான போத்தல்கள், நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவினால் கண்காணிப்புக்குட்படுத்தப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட மேலும் தெரிவித்துள்ளார்.

## மிஹிந்தலை கிராமிய நெல் திருவிழா விருந்துபசாரத்தில் மோதல்; ஒருவர் பலி

மிஹிந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீப்புக்குளம் பகுதியில் விருந்தொன்றின்போது இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சீப்புக்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.எம். கருணாரத்ன சிசிர குமார செனவிரத்ன என்ற 59 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (23) இரவு சீப்புக்குளம் பகுதியில் விவசாயப் பணிகள் நிறைவடைந்த நிலையில், கிராமிய நெல் திருவிழாவையடுத்து, அருகில் உள்ள வீடொன்றில் விருந்துபசாரம் இடம்பெற்றது.

இந்த விருந்தின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையிலேயே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

# கட்டடத்தில் இருந்து கீழே விழுந்த முதியவர் மரணம்

## நுவரெலியாவில் சம்பவம்



நுவரெலியா கட்டுமான பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டடம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த ஊழியர் கட்டடத்தில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த கட்டடத்தில் முதலாவது மாடியில் இருந்து ஊழியர் தவறி கீழே விழுந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் சனிக்கிழமை (23) இரவு இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மஹவலவத்த கீழ் பிரிவு, இரத்தினபுரியை வசிப்பிடமாகக் கொண்ட 59 வயதான சுப்பிர மணியம் வடிவேலு என்பவர் ஆவார்.

குறித்த நபர் அதிக மதுபோதையில் இருந்ததாகவும் இரவு முழுவதும் தங்கியிருந்த இடத்தில் அவரை காணவில்லை எனவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 08 மணியளவில் தேடிப் பார்த்தபோதே நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடத்தின் வெளியே இறந்த நிலையில் கிடந்ததாக சக தொழிலாளர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின்னர், சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு பிரேத பரிசோதனை இடம்பெற்றதன் பின்னர், உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



தியாக தீபம் திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவுகளைச் சுமந்து, நினைவேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவில் நேற்று நடைபெற்றது. திலீபன் வீதி மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டில் உள்ள புதிய நிலா விளையாட்டு மைதானத்தில் உணர்வுபூர்வமாக இந்நிகழ்வு நடைபெற்றது. திலீபன் நினைவு தினத்தை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி ஒன்றும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

படம்: பு.கஜிந்தன்



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கிய யானை உயிரிழந்துள்ளது. மண்ணகண்டல், 3ஆம் கண்டம் பகுதியில் நேற்று (24) இந்த சம்பவம் நடந்தது.

# யாழில் மாமியார் வீட்டுக்கு வந்த தென்னிந்திய இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன்





தென்னிந்தியாவின் பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் முதல் முறையாக நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

சந்தோஷ் நாராயணனை உலக புகழ் நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி குமரன் வரவேற்றார்.

சந்தோஷ் நாராயணன் மற்றும் அவரது மனைவி மீனாட்சி உள்ளிட்டவர்கள் கோண்டாவில் உப்புமடம் விநாயகர் ஆலயத்தில் இருந்து மங்கல வாத்தியத்துடன் கோண்டாவிலில் அமைந்துள்ள சந்தோஷ் நாராயணனின் மனைவியின் பூர்வீக இல்லத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு ரசிகர்கள் மற்றும் இசைக் கலைஞர்கள் சந்தோஷ் நாராயணனுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

சந்தோஷ் நாராயணன் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சியை நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.ச. பஸ்ஸை வழிமறித்து ஆட்கடத்தல்

## கம்பளையில் சம்பவம்



கம்பளை, மாவெல பகுதியில் இருந்து கண்டி நோக்கி இ.போ.ச. பஸ்ஸில் நேற்று (24) காலை பயணித்துக்கொண்டிருந்த நபரொருவர்மீது பஸ்ஸுக்குள் வைத்து கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், அதன்பின்னர் அவர் வேனொன்றில் கடத்திச்செல்லப்பட்டுள்ளார்.

கம்பளை, நிவர்சைட் பகுதியில் வைத்து பஸ்ஸின் முன்கதவில் இருவரும் பின்கதவில் இருவரும் ஏறியுள்ளனர். அதன்பின்னர் பஸ்ஸுக்குள் இருந்த குறித்த நபர்மீது கத்திக்குத்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பிறகு கம்பளை, ஜயமாலபுர பகுதியில், வீதியின் குறுக்கே வேனொன்றை நிறுத்திவைத்துவிட்டு அவரை கடத்திச்சென்றுள்ளனர்.

சம்பவத்தையடுத்து பஸ் சாரதி, பஸ்ஸை கம்பளை பொலிஸ் நிலையத்துக்கு ஓட்டிச் சென்றுள்ளார். மாவெலயில் இருந்து கண்டிக்கு இக்காலை 5.15 இற்கு செல்லும் பஸ்ஸில்தான் இவர் வந்துள்ளார் என உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சாரதியாக பணியாற்றிய ஒருவரே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார் என கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கம்பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 செப்டெம்பர் 25ஆம் திகதி, திங்கட்கிழமை

# மைத்ரியின் வேஷம்!

“உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால், அதனை அடிப்படையாகக்கொண்டு - யுத்தம் தொடர்பிலும் தமிழ் டயஸ்போராக்கள் சர்வதேச விசாரணை கோரலாம். எனவே, சர்வதேச விசாரணை அவசியமில்லை என ஐ.நா. பிரதிநிதியிடம் கூறிவிட்டேன். உள்ளக விசாரணைக்கு சர்வதேச தொழில்நுட்ப உதவி இருந்தால் போதும்” - இவ்வாறு மைத்ரிபால சிறிசேன கடந்த வெள்ளிக்கிழமை (22) பாராளுமன்றத்தில் தெரிவித்திருப்பது எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

பல்லேவத்தை கமராலலாகே மைத்ரிபால யாப்பா சிறிசேன ஜனாதிபதியாக ஆட்சிக்கு வந்தவர். தமிழ்ப் பேசும் சமூகங்கள் அவரை அரியணையில் அமர்த்தினர். இன்று எந்த நன்றிக்கடனோ ஈவிரக்கமோ இன்றி கதையளக்கிறார் விதானையார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் மஹிந்தவின் அமைச்சரவையில் சுகாதார அமைச்சராக இருந்தவருமான மைத்ரிபால சிறிசேன புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில் இருந்து இற்றைவரை வாயால் வடை சுட்ட கதைகளை உலகமே அறியும். கொள்கையில்லாத அவர் பேச்சுகள், அப்பம் உண்டு ஒரே மேசையில் அமர்ந்திருந்தவர்களிடம் கூட எந்தவித சலனத்தையும் காட்டாமல் அப்போது கட்சியில் இருந்து வெளியேறிய மைத்ரி, கட்சியின் செயலரான தயாசிறியை பதவியிலிருந்து தூக்கியதுவரை அமசடக்கு பேர்வழியாக நடந்துகொண்டவர்.

‘‘ஊழல் உள்ளிட்ட கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்ட மஹிந்தவின் புதல்வர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், விடுதலைப்புலிகளை அனுப்பிய அதே ‘புனர்வாழ்வு’ முகாம்களுக்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள்’’ என அப்போது சொன்னார் மைத்ரி. பின்னர் மஹிந்தவை அரசியலமைப்புக்கு முரணாக சென்று பிரதமராக்கி உயர்நீதிமன்றத்திடம் குட்டு வாங்கினார். பொன்சேகா பாராளுமன்றத்தில் சொன்னதுபோல இலங்கை வரலாறில் மோசமான ஜனாதிபதி என்ற பெயரை பெற்ற மைத்ரி இன்றும் மாறவில்லை.

மைத்ரி வெற்றிபெற்று மஹிந்தவின் வீழ்ச்சிக்குக் காரணம், தமிழ் பேசும் மக்கள் அளித்த ஆதரவுதான். மைத்ரிபால சிறிசேனவுக்கு அதிகப்படியாக 81% வாக்குகள் கிழக்கு இலங்கையின் தமிழ் பேசுவோரின் மாவட்டமான மட்டக்களப்பில்தான் கிடைத்தன. மைத்ரியின் சொந்த மாவட்டமான பொலன்னறுவையில் கூட வெறும் 57% வாக்குகளே கிடைத்தன.

தமிழர்கள் அதிகம் வாழும் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் மலையகத் தமிழர்கள் அதிகம் வாழும் கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய பகுதிகள் மற்றும் தலைநகர் கொழும்பிலும் மட்டுமே மைத்ரியால் மஹிந்தவை விட அதிக வாக்குகளைப் பெற முடிந்தது. கண்டி, நுவரெலியா உள்ளிட்ட மலையகப் பகுதிகளில் செல்வாக்குப் பெற்ற ஆறுமுகன் தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சி மஹிந்தவுக்கு ஆதரவு அளித்திருந்தபோதிலும், மக்கள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். மஹிந்தவுக்கும் மைத்ரிக்கும் சிங்களவர் பகுதியில் சரிசமமாகவே வாக்குகள் பிரிந்தன.

அது மைத்ரிக்கான ஆதரவு வாக்குகள் அல்ல. மஹிந்த மீதான எதிர்ப்பின் வெளிப்பாடு. இந்த வெற்றியின் மூலம் இலங்கைத் தீவில் அதுவரை நிலவிவந்த இறுக்கம் தளர்ந்தது என்பதைத் தவிர உடனடியாக எதுவும் நடக்கவில்லை. ஆனால் அப்போதைய தேர்தல் பிரசாரத்தின்போதே, ‘போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவு இல்லை’ எனவும் ‘வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றப் போவதில்லை’ எனவும் மைத்ரி சொல்லியிருந்தார். எப்படியாயினும் பதவிக்கு வந்தபின்னர் எதனையும் பேசித் தீர்க்கலாம் என்று குருட்டு நம்பிக்கையில் வழமைபோலவே இருந்த தமிழ்த்தரப்பு இறுதியில் ஏமாற்றமடைந்தது.

1960களில் ஈழத்தந்தை செல்வநாயகம் தலைமையில் கடுமையான அறவழிப் போராட்டங்கள் நடைபெற்றன. அப்போது ஆட்சியில் இருந்தவர் சிறிமாவோ பண்டாரநாயக்க. இவருடைய மகள்தான் மைத்ரி ஜனாதிபதியாக வெற்றிபெற பின்புலமாக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா. மஹிந்த, மைத்ரி ஆகியோரின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்தவரும் 1956இல் தனிச் சிங்களம் சட்டத்தை கொண்டு வந்தவருமான பண்டாரநாயக்கவின் மனைவியான சிறிமாவின் ஆட்சியில் தமிழர்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். தமிழரசுக் கட்சியின் தலைவர்கள் இராணுவச் சிறைகளில் வைக்கப்பட்டிருந்தனர்.

அந்த கட்சியின் வழிவந்த மைத்ரி இறுதிப்போருக்கு தமிழர்கள் நீதி கேட்டுவிடுவார்கள் என்று கருதி ஈஸ்ரர் தின தாக்குதலுக்கே சர்வதேச விசாரணை வேண்டாம் என்கிறார் என்றால் இந்த பிரகிருதியின் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் எப்படி என்பதை உணரமுடிகிறது.

இறுதிப்போருக்கு அப்படியொரு விசாரணை நடந்தால் குற்றவாளிகள் அம்பலமாகுவர் என்பதால், ஈஸ்ரர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை நடந்தால் தனது வண்டவாளம் தண்டவாளம் ஏறிவிடுமென நினைக்கிறார் மைத்ரி. தமிழர்களுக்கு அல்லது ஈஸ்ரர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச விசாரணை ஒன்றில் நீதி கிடைக்காவிடினும் அந்த கர்மவினை என்றாவது ஒருநாள் கருவறுத்தே தீரும். அதற்கு மைத்ரியும் பதில் கூறியாக வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1862 – செப்பு நாணயம் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- 1959 – இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டார நாயக்க, சோமராம தேரர் என்ற பௌத்த பிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து அடுத்த நாள் இறந்தார்.
- 1992 – செவ்வாய்க் கோளை நோக்கிய “செவ்வாய் நோக்கி” என்ற விண்கலத்தை நாசா ஏவியது. 11 மாதங்களின் பின்னர் இவ்விண்கலம் செயலிழந்தது.
- 1992 – யாழ்ப்பாணம், பூநகரியில் 62 இராணுவக் காவல ரண்கள் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன.
- 2015 – இலங்கையின் மலையகத்தில் இறம்பொடையில் ஏற்பட்ட மண்சரிவில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 07 பேர் உயிரிழந்தனர்.

# குழந்தைகளுக்கு நீரிழிவு நோய்: கவனம் தேவை



குழந்தைகளைப் பாதிக்கும் டைப்-1 நீரிழிவு நோய் ஆங்கிலத்தில் ‘Juvenile Diabetes’ எனப்படும். இதில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் சர்க்கரை அளவைப் பொறுத்து இன்சுலின் அளவை வைத்தியர்கள் பரிந்துரை செய்வார்கள். டைப்-1 நீரிழிவு நோயைப் பொறுத்தவரை கட்டாயம் இன்சுலின் எடுத்துக்கொள்ள வேண்டி இருப்பதால், அலோபதி மருத்துவ முறையே இதற்குப் பொருந்தும்.

குழந்தைகளுக்கு நோய் பாதிப்பு மேலும் தீவிரமாகாமல் இருக்க கண்டிப்பாக சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும். இதைத் தவிர, குழந்தைகளுக்கு அதிக இனிப்பு உணவைக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். உடலைப் பாதிக்கும் உணவுக்குக் கட்டுப்பாடு தேவை. பாடசாலை வகுப்பு முடிந்த பின்பு மாலை நேரத்திலும் கூடுதல் வகுப்பு, படிப்பு எனப் பெற்றோர்கள் அவர்களை விளையாட அனுமதிப்பதில்லை. இந்தப் போக்கு முற்றிலுமாக மாற்றப்பட வேண்டும்.

குழந்தைகளிடம் அதிக உடல் உழைப்பைப் பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டியது அவசியம். 40 வயதுடைய பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்தால் அவர்களது குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியம் அதிகம் என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன. எனவே நீரிழிவு நோயுள்ள பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளின் உணவுமுறையில் கவனமாக இருக்க வேண்டும்.

பொதுவாக டைப்-1 நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள் அதிகம் தென்படாது. வேறு நோய் பாதிப்பு இருக்கும் பட்சத்தில் டைப்-1 நீரிழிவுக்கான அறிகுறிகள் தென்படும். அப்போது உடனடியாக மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். தற்போது குழந்தைகள், இளைஞர்கள் எனப் பெரும்பாலானோருக்கு உடல் பருமன் பிரச்சினை இருக்கிறது. இதைப் பற்றி கவனக் குறைவாக இருந்துவிடாமல் வயதுக்கு ஏற்ற உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருப்பது நல்லது.

# ஒளிர் திரை பயன்பாடு குறைப்போம்...

பேரா.தி.ஜெயராஜசேகர்

சூரியனிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் நம் கண்களை பாதிக்கும் என்பதை அறிந்திருக்கும் பலர் ஒளிர் திரையில் இருந்து வரும் நீல ஒளி கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருப்பதில்லை. சூரியன், ஒளிர் திரை மின்சாதனம், தொலைக்காட்சி, கணினி, மடிக்கணினி, அறிதிறன்பேசி, கைக்கணினி, உறிஞ்சியொளிவீசு (ஃப்ளோரசன்ட்) விளக்குகள், ஒளிமுனை (எல்.இ.டி) விளக்குகள் போன்றவை அதிக ஆற்றல் புலப்படு (ஹை எனர்ஜி விசிபிள்) அலைநீளம் கொண்ட நீல ஒளியை



உருவாக்குகின்றன.

கண்களின் முன் பகுதியை பாதிக்கும் புற ஊதாக் கதிர்கள் கண்புரையை உருவாக்குகிறது. கண்களின் பின் பகுதியை பாதிக்கும் நீல ஒளி, விழிப்புள்ளிச் சிதைவை (மாகுலர் டீஜெனெரேஷன்) ஏற்படுத்தும். தெளிவான, கூர்மையான பார்வையை பாதிக்கும் நீல ஒளி கண்களின் காட்சி மாறுபாட்டைக் குறைப்பதாகவும் கண் சோர்வு, தலைவலி, உடல் சோர்வு, மனச் சோர்வை ஏற்படுத்துவதாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இன்று பெரும்பாலானோர் ஒளிமுனை விளக்கினை ஒளி மூலமாக பயன்படுத்திக் கொண்டிருக்கும் சூழலில் இரவு நேர நீல ஒளி உமிழ்வு சாதனங்களின் உபயோகம் முழு அளவிலான கண் சேதத்தை ஏற்படுத்தும் என்று அறிவியல் ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

ஒளிர் திரை வெளியிடும் நீல ஒளி காரணமாக தொடக்கத்தில் ஏற்படும் கண் எரிச்சல் பின்னாளில் கண்ணயற்சியாக மாறும். ஒளிர் திரைகளில் அதிக நேரம் செலவிடுவதால் கணினி பார்வை நோய்க்குறி (கம்ப்யூட்டர் விஷன் சிண்ட்ரோம்) என்ற பார்வை தொடர்பான பிரச்சினை உருவாகும்.

தலைவலி, கண் எரிச்சல், பார்வை மங்குதல், ஒளிப்புலத்தம் (லைட் சென்சிட்டிவிட்டி), கூர்ந்து நோக்குதலில் சிரமம் போன்றவை இப்பிரச்சினைக்கான அறிகுறிகளாகும்.

நாள்பட்ட நீல ஒளி பாதிப்பு, விழிகளை போதுமான கண்ணீரை உருவாக்க இயலாத நிலைக்கு கொண்டு செல்லும்.

இந்த மோசமான கண் பாதிப்புக்கு உலர் விழி (ட்ரை ஐ) என்று பெயர். கண் எரிச்சல், கண்கள் வீங்குதல், கண்ணில் ஏற்படும் அரிப்பு, பார்வை மங்குதல் ஆகியவை இப்பிரச்சினைக்கான அறிகுறிகள் என்கின்றனர் கண் வைத்தியர்கள்ள.

நீண்ட நேர ஒளிர் திரை சாதனப் பயன்பாடு விழித்திரை பாதிப்பையும் பார்வை இழப்பையும் ஏற்படுத்தும் என எச்சரிக்கின்றனர் வல்லுநர்கள். பார்வையில் பாதிப்பு ஏற்படுத்தும் வயது தொடர்பான விழிப்புள்ளிச் சிதைவு (ஏஜ் ரிலேடட் மாகுலர் டீஜெனரேஷன்) வாகனம் ஓட்டுதல், படித்தல், நபர்களை அடையாளம் காண்பது போன்ற தினசரி பணிகளை செய்வதில் சிரமத்தை ஏற்படுத்துகிறது.

உலகம் முழுவதும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களின் பார்வை இழப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றான வயது தொடர்பான விழிப்புள்ளிச் சிதைவு நோய் உள்ளது. இது 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களையே அதிகம் பாதிக்கிறது.

பொதுப் புலன் ஊடகத்தின் (கொமன் சென்ஸ் மீடியா) சமீபத்திய ஆய்வின்படி பதின் வயதினர் ஒவ்வொரு நாளும் பள்ளிப் பணிகளுக்காக கணினியில் செலவிடும் நேரம் தவிர்த்து சராசரியாக 7 மணி 22 நிமிடம் ஒளிரும் திரை கொண்ட பொருட்களில் செலவிடுகின்றனர். ஒளிர் திரைகளில் செலவிடப்படும் அதிக நேரம் மனித உடல் பாதிப்புகளை அதிகரிக்கும் என ஆய்வுகள் எச்சரிக்கின்றன.

நாம் உறங்குவதற்கு உதவும் மெலடோனின் என்ற வேதிப்பொருளை மனித உடல் இரவின் இருளில் வெளியிடுகிறது. ஒளிரும் திரையில் இருந்து வரும் ஒளி நம் உடலில் மெலடோனின் உற்பத்தியைக் குறைத்து நம்மை விழித்திருக்கச் செய்கிறது. பதின்ம வயதினரின் குறைந்த நேரத் தூக்கம் அவர்களின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை பலவீனப்படுத்தி அவர்கள் நோயால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தும். தூக்கமின்மை பதின்ம வயதினரின் கற்கும் திறனை பாதிக்கும்; கவனச்சிதறலை ஏற்படுத்தும்; நினைவாற்றலையும் பாதிக்கும்.

அதிகப்படியான திரை உருளலும் (ஸ்க்ரோலிங்), குறுஞ்செய்தி அனுப்புதலும் மனிதர்களின் உணர்வுபூர்வமான மன ஆரோக்கியத்தில் பாதிப்பு ஏற்படுத்துவதுடன், அவர்களின் மனச்சோர்வையும் அதிகரிக்கச் செய்யும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

குழந்தைகளின் மனநிலையிலும் நடத்தையிலும் மாற்றங்களை உருவாக்கும் ஒளிர் திரை சாதனப் பயன்பாடு தடுக்கப்படும்போது அக்குழந்தைகள் கவலையான மனநிலைக்குச் செல்லும் என வல்லுநர்கள் கூறுகின்றனர். அக்குழந்தைகள் தங்கள் பொறுப்புகளைப் புறக்கணிப்பதுடன் மன அழுத்தத்தை சமாளிக்க மீண்டும் ஒளிர் திரைகளுக்கே திரும்புகின்றனர்.

இளமைப் பருவத்தில் கைப்பேசியில் அதிக நேரம் செலவிடுவதால் நினைவு, சிந்தனை, கற்றல், பகுத்தறிவு, சிக்கலைத் தீர்ப்பது தொடர்பான செயல்பாடுகளுக்கு காரணமான மூளைப் புறணியின் (கார்டெக்ஸ்) வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படலாம் என்கின்றனர் அறிஞர்கள்.

இளம் பருவ மூளை அறிவாற்றல் வளர்ச்சி (அடொலசென்ட் ப்ரெய்ன் காகினிடிவ் டெவெலப்மென்ட்) எனப்படும் ஆய்வில் ஒரு நாளைக்கு ஏழு மணி நேரத்துக்கும் மேலாக ஒளிர் திரைகளைப் பயன்படுத்தும் சிறுவர்களுக்கு, அதனைவிடக் குறைவாகப் பயன்படுத்துபவர்களை விட மெல்லிய மூளைப் புறணி உரை இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

பணி நிமித்தமாகவோ ஓய்வு நேரத்தைப் போக்குவதற்காகவோ ஒளிர்திரை கொண்ட கைப்பேசி, கணினி, கைக்கடிகாரம் ஆகிய சாதனங்கள் வழி தரவுகளைப் பரிமாறிக் கொள்ளுதல் இன்று வழக்கமாகி வருகிறது.

இந்நிலையில், ஒளிர் திரையின் பயன்பாடு குறைந்த அளவில் இருந்தால் கண்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கும்.

## நக்கல் நமசிவாயம்

நேற்று நாடு திரும்பிய ரணில் ஐயா அடுத்தவாரம் ஜேர்மனி போகிறாராம்.. அதற்குப் பிறகு சீனாவுக்கு... ஒரே ஒரு சீட்டில் வந்து உலகம் சுற்றும் வாலிபன்...



## இலங்கை சந்தையில் அமெரிக்க எரிபொருள் நிறுவனம் பிரவேசம்




அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஆர். எம். பார்க்ஸ் நிறுவனம் அடுத்த மாதம் முதல் இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பிக்கும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் ஒதுக்கப்பட்ட 150 எரிபொருள் நிலையங்கள் மூலம் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் நிறுவனம் கடந்த ஜூன் மாதம் 20 வருட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

லங்கா ஐ. ஓ. சி. (LIOC) மற்றும் சீனாவின் சினோபெக் நிறுவனங்களுக்குப் பின்னர் நாட்டின் எரிபொருள் சந்தையில் அமெரிக்கன் ஆர். எம். பார்க்ஸ் நிறுவனம் நுழைகிறது.

இந்த நிறுவனத்திற்கு முதலில் 150 எரிபொருள் நிலையங்கள் வழங்கப்படும். பின்னர் 50 எரிபொருள் நிலையங்களைச் சொந்தமாகத் திறக்க வாய்ப்பு கிடைக்கும்.

ஆர் எம் பார்க்ஸ், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு எரிபொருள் நிலையத்தையாவது கொண்டிருக்கும். பல நிலையங்கள் கொழும்பு போன்ற நகர்ப்புற மையங்களில் நிறுவப் படவுள்ளன.

முன்னதாக ஓகஸ்ட் பிற்பகுதியில் எரிபொருள் விநியோகத்தைத் தொடங்கிய சீனாவின் சினோபெக்கைப் போலவே, ஆர். எம். பார்க்ஸும் அதன் எரிபொருளை தள்ளுபடி விலையில் விற்க வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட ஆர் .எம் .பார்க்ஸ் நிறுவனம் ஒவ்வொரு மாதமும் 40,000 மெற்றிக் தொன் எரிபொருளை இறக்குமதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கையின் ஸ்திரத்துக்கான பயணத்தில் கருத்துச் சுதந்திரத்தை பலியிடக் கூடாது

### அமெரிக்க தூதுவர் ஜூலி

இலங்கை ஸ்திரத்தன்மையை அடைவதற்கான பயணத்தில் கருத்துச் சுதந்திரத்தைப் பலியிடக் கூடாதென இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார்.

அமைதியான போராட்டங்கள் மூலமாகவோ, கலை வெளிப்பாடுகள் மூலமாகவோ அல்லது சமூக ஊடகங்கள் மூலமாகவோ கருத்துகளை வெளிப்படுத்த முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு மஹரகம இளைஞர் சேவை மன்ற மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.இந்த நிகழ்வு நீதி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.




இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதுடன் புத்தாக்கத்தின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பு வதற்கும் அனைவருக்கும் வலுவான நம்பிக்கை இருப்பதாக ஜூலி சங் சுட்டிக்காட்டினார்.



நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தலைமையில் மஹரகம தேசிய இளைஞர் சேவை மன்ற வளாகத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ரயில் சீசன் ரிக்கெட் முறை இரத்து; கட்டணங்களும் உயரும் சாத்தியம்

எதிர்காலத்தில் ரயில் பருவகால சீட்டை (சீசன் டிக்கெட்) இரத்துச் செய்வதுடன் அனைத்து கட்டணங் களையும் உயர்த்த போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியதன் பின்னர் இது நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ரயில்வே திணைக்கள பிரதானிகள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடல் ஒன்று போக்குவரத்து அமைச்சில் அண்மையில் இடம்பெற்றபோதே, அமைச்சு இதனை வெளிப்படுத் தியுள்ளது.

இதன்படி, ரயில் சீசன் டிக்கெட்டு களை இரத்துச் செய்வதன் மூலம் அதிகார சபை பெருமளவு இலாபத்தைப் பெறமுடியும் என போக்குவரத்து அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

## இராஜாங்க அமைச்சரின் உறவினர் சுட்டுக்கொலை!

காலி டிக்சன் வீதிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த வர்த்தகர், இராஜாங்க அமைச்சர் டி.வி.சானகவின் மனைவியின் தந்தை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று மாலை அவர் காரில் சென்று கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுடப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

உயிரிழந்த நபர் புடவை வியாபாரம் செய்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ரி56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட இடத்தில் 17 வெற்றுத் தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பேருந்து மோதி 2பேர் பலி!

### கலேவெலயில் சம்பவம்

குருநாகல்- தம்புள்ளை பிரதான வீதியின் கலேவெல, கல்கமுவ பிரதேசத்தில் நேற்று (24) காலை தனியார் பேருந்தும் முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதியதில் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்துள் ளதுடன் மேலும் மூவர் படுகாய மடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து எம்பிலிப்பிட்டி நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் ஆராச்சிக்கட்டுவ பகுதியிலிருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியொன்றுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் சிக்கிய முச்சக்கர வண்டியில் ஆராச்சிக்கட்டுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் பயணித்தனர் என தற்போதைய ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக கலேவெல பொலிஸார் தெரிவித் தனர்.

உயிரிழந்த இருவரினதும் சடலங்கள் கலேவெல பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், காயமடைந்த பெண்ணொருவரும் மற்றுமொரு ஆண் மற்றும் 6 வயது சிறுவன் ஒருவரும் கலேவெல வைத்தியசாலையில் இருந்து தம்புள்ளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## நாகதம்பிரான் ஆலய அலங்கார உற்சவம்

வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் ஸ்ரீ பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று(24)ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமானது.

தொடர்ந்து 11தினங்கள் இடம்பெறவுள்ள உற்சவங்களில் ஆலய வரலாற்றைக் கூறும் 07ஆம் திருவிழாவான கப்பல் திருவிழா, 30ஆம் திகதி சனிக்கிழமையும் ஒக்டோபர் 01ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 2ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத்திருவிழாவும் 03ஆம் திகதி செவ்வாய்க் கிழமை சமுத்திர தீர்த்தோற்சவமும் நடை பெறும்.

மறுநாள் 04ஆம் திகதி புதன்கிழமை பட்டுத் தீர்த்தமும் (கேணி) இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுபெறும்.

## பொறுப்புக்கூறல் தொடர்பில் அரச பணியாளர்களுக்கு கருத்தரங்கு





ரஸீன் ரஸ்மின்

“அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக் கூறல்” எனும் தலைப்பில் முந்தல் பிரதேச செயலகத்தின் கீழ் கடமைபுரியும் கள உத்தியோகத்தர்களுக்கான விசேட செயலமர்வொன்று முந்தல் சமுது வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

“வேர்ள்ட் விஷன் லங்கா” அமைப்பு ஏற்பாடு செய்த இந்தச் செயலமர்வில் முந்தல் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் டபிள்யூ. ரி.எம்.எஸ்.பி. மல்வில, முந்தல் பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் கே.எஸ்.எம்.ஷிரோமி, முந்தல் சமுர்த்தி தலைமையக முகாமை யாளர் ஆர்.டி.ஏ.ஐ. ஆரியரத்ன உட்பட முந்தல் பிரதேச செயலகத் தின் கீழ் கடமைபுரியும் அனைத்து கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் சட்டத்தரணி ஜீவனி காரியவசம் வளவாளராகக் கலந்துகொண்டார்.

இதன்போது, தகவல் அறியும் சட்டமும் அதன் நன்மைகளும் தீமைகளும் எனும் தலைப்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

அத்துடன், அரச சேவை மக்க ளுக்கு சென்றடையும் விதம் தொடர் பிலும் டிஜிடல் மயம் மூலம் மக்க ளுக்கு பூரணமான சேவையை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பிலும் உத்தியோகத்தர் களுக்கு இதன்போது தெளிவூட்டப் பட்டது.

## பேராதனை பல்கலைக்கழக மாணவன் திடீர் உயிரிழப்பு



பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பிரதேசத்தில் வசிக்கும் 23 வயதுடைய பல்கலைக்கழக மாணவர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பல் மருத்துவ பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்று வருகிறார்.

பேராதனை பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் மாணவர்களுடன் தங்கியிருந்த மாணவன் மூச்சு விடுவதில் சிரமம் காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒரு மணித்தியாலத்தில் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







ஆரோக்கியமான வாழ்வு என்ற தலைப்பில் இலவச மருத்துவ ஆலோசனைகளும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான வழிகாட்டலும் உடப்பில் ஞாயிற்றுக்கிழமை (24) இடம் பெற்றன. திவ்விய ஒளி கலை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓம் சாந்தி கலையகம், பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தின் சார்பாக பல வைத்தியர்கள் கலந்து கொண்டு மருத்துவ உதவிகளை வழங்கியதோடு சிறப்புரையை வைத்திய கலாநிதி விஜயஸ்ரீ சந்திரமோகன் ஆற்றினார்.

படங்கள்: உடப்பு நிருபர்








முந்தல் பிரதேச செயலக தேசிய இலக்கிய விழா முந்தல் பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை (22) பிரதேச உதவிச் செயலாளர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது முந்தல் பிரதேச செயலக உதவிச் செயலாளர் சாலிய பண்டார, முந்தல் பிரதேச வேர்ள்ட் விஷன் ஒருங்கிணைப்பாளர் தினேஷ்,முந்தல் பிரதேச செயலக கலாசார சங்கச் செயலாளர் பீரிஸ் ஆகியோர் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். பாடசாலை மாணவர்கள்,மூத்த கலைஞர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

படங்கள்: உடப்பு நிருபர்

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.09.22
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5245
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 28,007,160.00
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 3 8 0 6 7 9

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3487
சீட்டிழுப்பு திகதி: 2023.09.22
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: Rs. 61,908,705.60
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 31 36 62 67
விசேட எழுத்து: T
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 29853

**லக்கி 7**
திகதி: 22.09.2023
சீட்டிழுப்பு இலக்கம்: 0071
வெற்றி இலக்கினம்: மேஷம்
வெற்றி இலக்கங்கள்: 3 0 6 0 1 7
L7 இலக்கம்: 3 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 11,025,341.76

**தன நிதானய**
தேதி: 2023/09/22
சீட்டிழுப்பு இலக்கம்: 1275
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 111,526,748.00
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 09 21 57 73
விசேட ஆங்கில எழுத்து: C
Double Chance இலக்கம்: 15922

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு திகதி: 2023-09-22
சீட்டிழுப்பு இலக்கம்: 554
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ.3,284,778.40
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 06 11 35 55
விசேட இலக்கினம்: தனுசு

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம்: 1593
22/09/2023
Double Chance: 34683
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ.408,469,316.00
ஆங்கில எழுத்து: X
சுப்பர் இலக்கம்: 15
வெற்றி இலக்கங்கள்: 38 44 48 78
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.09.23
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5246
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 28,072,736.00
ஆங்கில எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 0 2 1 3 8 0

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3488
சீட்டிழுப்பு திகதி: 2023.09.23
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: Rs. 61,908,705.60
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 05 20 24 39
விசேட எழுத்து: G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 50825

**லக்கி 7**
திகதி: 23.09.2023
சீட்டிழுப்பு இலக்கம்: 0072
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 1 5 4 1 3 0
L7 இலக்கம்: 3 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு: ரூ. 11,064,596.72

**தன நிதானய**
தேதி: 2023/09/23
சீட்டிழுப்பு இலக்கம்: 1276
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 111,785,629.60
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 21 24 50 66
விசேட ஆங்கில எழுத்து: M
Double Chance இலக்கம்: 11429

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு திகதி: 2023-09-23
சீட்டிழுப்பு இலக்கம்: 555
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ.3,299,326.40
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 19 21 34 58
விசேட இலக்கினம்: மீனம்

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம்: 1594
23/09/2023
Double Chance: 39485
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ.408,603,180.00
ஆங்கில எழுத்து: X
சுப்பர் இலக்கம்: 14
வெற்றி இலக்கங்கள்: 08 14 34 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# கணவன் - மனைவி தகராறு; கத்தியால் குத்தி கணவன் கொலை

ஆ.ரமேஸ், சந்ரு, திவாகரன்



காதலித்து திருமணம் செய்து கொண்ட கணவன், மனைவிக்கிடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக கணவனை மனைவி கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாகாஸ்தொட்ட விஜிரபுர கிராமத்தில் நேற்று முன்தினம்(23) இரவு 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் நுவரெலியா குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான பி.சந்திரசேகரன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார். இவரை அவரது மனைவியான எம்.என்.எம்.ரிஸ்வானா என்பவர் சரமாரியாகக் கத்தியால் குத்தி படுகொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது கணவர் மது அருந்திய நிலையில் வீட்டுக்கு வந்து தன்னிடம் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாக சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான மனைவி விசாரணையில் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில், குறித்த சம்பவம் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டுள்ள குடும்பத் தகராறு காரணமாகவே ஏற்பட்ட கொலைச் சம்பவம் என்ற கோணத்தில் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தின் கவனத்துக்கு பொலிஸார் தெரியப்படுத்தியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு நீதவான் வருகை தந்து மரண விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# மண்சரிவின் பின்னர் குடியேறிய மக்களுக்கு 05 வருடங்களாகியும் நீரோ மின்சாரமோ இன்னும் இல்லை

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இறக்குவானை தேர்தல் தொகுதியின் ஓப்பனாயக்க, இம்புல்தென்ன பிரதேசத்தில் மண்சரிவால் கடந்த 05வருடங்களாகக் குடியேற்றப்பட்ட மக்கள் நீர், மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள் எதுவுமின்றி பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

2016ஆம் ஆண்டு மேற்படி பிரதேசத்தில் இடம்பெற்ற கடும் மழை மற்றும் மண்சரிவு காரணமாக அக்கரெல்ல, பொல்வத்தைஹேன மற்றும் இன்னும் பல பிரதேசங்களில் மண்சரிவு காரணமாக அபாயகரமான விதத்தில் வாழ்ந்து வந்த 61 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர்.

எனினும், இன்று வரை தங்களின் வீடுகளுக்கான மின்சாரமோ நீர் வசதியோ வழங்கப்படவில்லை என இவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், தமது பாடசாலை செல்லும் பிள்ளைகள், வயோதிபர்கள் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள பெரும் அல்லல் படுகின்றனர் என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விடயமாக ஓப்பனாயக்க பிரதேச செயலகத்தின் அதிகாரிகளிடம் வினவியபோது, இம்மக்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகவும் நிதித்தட்டுப்பாடு காரணமாகவே இப்பணிகளை நிவர்த்தி செய்ய முடியாதிருந்ததாகவும் தனியாக ட்ரான்ஸ்போமர் அமைத்து இப்பகுதிக்கான மின்சாரம் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருட்டு

ரி.பெருமாள், ஆர். ஆறுமுகம்





தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டக்கொடை ஒக்ஸ்போட் தோட்ட முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் (23) அதிகாலை திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஈடுபட்ட திருடர்கள் ஆலயத்தின் கதவை உடைத்து அங்கு அம்மனுக்கு அணிவித்திருந்த தங்கத்தாலி மற்றும் ஐயப்பன் சுவாமிக்கு அணிவித்திருந்த தங்கச் சங்கிலி, ஆலயத்தின் உண்டியல் என திருடிச் சென்றுள்ளனர்.

ஒக்ஸ்போட் தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை(22) மாலை முதல் நேற்று முன்தினம் (23) காலை வரை மின் தடை ஏற்பட்டிருந்ததால் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறித்த திருட்டுச் சம்பவம் நிகழ்ந்திருப்பதாக சந்தேகிப்பதாகத் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இந்தத் திருட்டுச் சம்பவம் குறித்த விசாரணைகளில் அதிரடிப்படையினரும் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

# மாணவர்களுக்கான சிறுவர் உரிமை மீறல் தொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வு

கினிகத்தேனை நிருபர்

கினிகத்தேனை விக்னேஸ்வரா கல்லூரியில் கினிகத்தேனை பொலிஸ் நிலையத்தினூடாக மாணவர்களுக்கான சிறுவர் உரிமை மீறல் தொடர்பான விளக்கமளிக்கும் செயலமர்வு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (22) இடம்பெற்றது.

இச்செயலமர்வில் சிறுவர் உரிமை மீறல், முன்மாதிரியான நடத்தை, சிறார்களின் எதிர்காலம், ஒழுக்கம், நன்நடத்தை ஆகிய விடயங்களை உள்ளடக்கி மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் ஹட்டன் வட்டார சமூக பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.சந்திரசேகரன், கினிகத்தேனை பெண்கள் சிறுவர் பொலிஸ் பிரிவின் அதிகாரிகளான டபிள்யூ.பி.எஸ்.பிரியந்தி, உதேஷா, குமார, கொத்தலாவல ஆகியோர் கலந்துகொண்டதோடு பாடசாலையின் அதிபர் டி.தெய்வேந்திரன் மற்றும் பொறுப்பாசிரியர்களும் கலந்துகொண்டனர்.

# புதையல் தோண்டியவர் குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் வசமாகப் பிடிபட்டார்

பொலிஸாரின் சுற்றி வளைப்பில் நேற்று முன்தினம் (23) மாலை எல்ல, கரந்தகொல்ல பிரதேசத்தில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த நபர் பண்டாரவளை குற்றப்பிரிவு அதிகாரிகளால் வசமாகப் பிடிபட்டார்.

எல்ல கரந்தகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கரந்தகொல்ல காப்புக்காட்டில் சோதனை மேற்கொண்டபோது சந்தேகநபர் புதையல் தோண்டிக் கொண்டிருந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவரிடமிருந்து மண்வெட்டி போன்ற புதையல் தோண்டப் பயன்படுத்தப்படும் சில உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக நபர் பண்டாரவளை தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹட்டனில் பாரியளவில் குப்பை குவிந்து துர்நாற்றம்

மஸ்கெலியா நிருபர்

ஹட்டன் நகரில் பல பகுதிகளிலும் குப்பைகள் குவிந்து துர்நாற்றம் வீசும் நிலை காணப்படுகிறது.

பிரபல பாடசாலையை அண்டிய பகுதியில் கிறிஸ்தவ சொரூபம் அமைக்கப்பட்டுள்ளது. அப்பகுதியில் அதிகளவான குப்பை போடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பாடசாலை மற்றும் தபாற்கந்தோருக்கும் வழிபாடுகளுக்கும் செல்லும் மக்கள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்ள நேர்கிறது எனப் புகார் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட நகர சபை முன்வந்து உடன் இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# தியாக தீபம் திலீபனின் நினைவூர்திக்கு வடமராட்சியில் மக்கள் அஞ்சலி







பு.கஜிந்தன்

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் ஊர்திக்கு நேற்று முன்தினமிரவு வடமராட்சி, நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று முன்தினம் பிற்பகல் வடமராட்சி கிழக்கு கோவில் பகுதியிலிருந்து ஆரம்பித்த தியாக தீபம் திலீபனின் ஊர்தி வலம்வந்து பிற்பகல் 6.30 மணியளவில் நெல்லியடியை வந்தடைந்தது. தொடர்ந்து பருத்தித்துறை ஊடாக இன்பருட்டி பகுதிக்குச் சென்றது.

நெல்லியடி, பருத்தித்துறை பகுதிகளில் மக்கள் மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இன்பருட்டியில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் தியாக தீபத்துக்கு அஞ்சலி





மன்னார் நகர் நிருபர்



தியாகதீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் (23) மாலை 04 மணியளவில் மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் மாலை 04 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றி அடையாள உண்ணாவிரதப் போராட்டமாக அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் முக்கியஸ்தர்கள், பொது மக்கள் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

## ரயில் மோதி வயோதிபப் பெண் மரணம்

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை வடக்கு பகுதியில் நேற்று (24) காலை ரயிலுடன் மோதுண்டு வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச்சென்ற புகையிரதத்துடன் காலை 4.15 மணியளவில் மீசாலைக்கும் புத்தூர்ச் சந்திக்குமிடைப்பட்ட ரயில் பாதையில் ரயிலில் மோதி வயோதிபப் பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 67வயதான கி.நாகேஸ்வரி என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்துள்ளார்.

மேற்படி வயோதிபப் பெண் தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.






யாழ்ப்பாணம், வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் தொழிற்பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை(22) தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபை உத்தியோகத்தர் தம்பன் துஷாந்தன் தலைமையில் இடம்பெற்றபோது மாவட்ட அரசாங்க அதிபர், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, Naita மாவட்ட முகாமையாளர், undp திட்ட உத்தியோகத்தர்கள், பிரித்தானிய உயர்ஸ்தானிகரக அதிகாரிகள், cecd நிறுவன உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்: பு.கஜிந்தன்)

# தேசிய கண்காணிப்பாளர் கடமை நேரத்தில் பொலிஸாரால் சரமாரியாகத் தாக்குதல்

## சிவகுரு ஆதீனம் கண்டனம்

சாவகச்சேரி நிருபர்


சிவகுரு ஆதீனம்
SIVAGURU ATHEENAM
692, Point Pedro Road, Nallur, Jaffna.

இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் தேசிய கண்காணிப்பாளர் கடமை நேரத்தில் பொலிஸாரால் சரமாரியாகத் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு சிவகுரு ஆதீனம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக ஆதீனம் வெளியிட்ட கண்டன அறிக்கையில்,

இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர்சபை கடந்த 47வருடங்களாக முதலுதவிப் பணிகளையும் ஆன்மீகப் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வருகின்ற ஓர் அமைப்பு.

இந்து ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் இப் பணிகளை ஆற்றிவரும் வகையில் இம்முறை நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ காலத்திலும் பணியாற்றியமை பாராட்டத்தக்கது.

எமது சிவகுரு ஆதீன திருவிழாவிலும் இவர்கள் தொண்டாற்றியிருந்தனர். முதலுதவிச்சங்க உறுப்பினர்கள் ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் மனித விழுமியங்களைப் பின்பற்றுவதிலும் மற்றவர்களை மதிப்பதிலும் சிறந்து விளங்குகின்றனர்.

இந்நிலையில், நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழா அன்று தொண்டர் சபையைச் சேர்ந்த தேசிய கண்காணிப்பாளர் யாழ். மாநகரசபை முன்றலில் வீதித்தடையில் இருந்த ஸ்ரீலங்கா பொலிஸாரால் இரத்தம் வருமளவுக்கு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

அதுவும் கடமையில் ஈடுபட்டிருந்த தன்னலமற்ற தொண்டர் ஒருவர் மோசமாகத் தாக்கப்பட்டமையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அநீதியான வன்முறையான மனிதாபிமானமற்ற இச்செயலை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதை உரியவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென மேலும் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







வரலாற்று சிறப்புமிக்க வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கட வரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில் புரட்டாசி சனி வாரத்தின் முதலாவது வார உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. வசந்தமண்டபத்திலிருக்கும் ஸ்ரீ வேங்கட வரதராஜப்பெருமாள், சீதேவி, பூமாதேவி உள்ளிட்ட பரிவாரதெய்வங்களுக்கு அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்று புரட்டாசி சனி உற்சவம் இடம்பெற்றது. ஆலய பிரதமகுரு இ.ரமணீதரக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார் கலந்துகொண்டு உற்சவ கிரியையை நடத்திவைத்தனர்.

(படப்பிடிப்பு: கஜிந்தன்)

## காலிஸ்தான் தலைவர் கொலை விவகாரம்

# கனடா உளவுத்துறை தகவல்களை பகிரவில்லை

## மறுக்கிறது இந்தியா

## கனடாவின் விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் - அமெரிக்கா





கனடாவில் காலிஸ்தான் தலைவர் கொல்லப்பட்ட விவகாரத்தில் சில வாரங்களுக்கு முன்பே உளவுத்துறையின் தகவல்களை இந்தியாவுடன் பகிர்ந்துக் கொண்டதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியிருந்தநிலையில், ''குறிப்பிட்ட எந்தவொரு தகவலையும் கனடா பகிரவில்லை'' என இந்திய வெளியுறவு அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இந்தியா மீது தாம் கூறிய குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்கள் எதையும் வெளியிடாத கனேடிய பிரதமர், இந்தியாவிடம் தேவையான ஆதாரங்களை முன்பே ஒப்படைத்து விட்டதாக தெரிவித்திருந்தார்.

5 ஐஸ் என்றழைக்கப்படும் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகளின் உளவுக்கூட்டணியின் அடிப்படையில்தான் ட்ரூடோ இந்தியா மீது குற்றம் சாட்டியிருப்பதாகவும் இந்த வழக்கின் விசாரணையில் இந்தியா கனடாவுடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அமெரிக்கா அறிவித்திருந்தது.

இந்நிலையில், ''கனடா அரசு எந்தவொரு குறிப்பிட்ட ஆதாரத்தையும் தகவலையும் பகிரவில்லை'' என்று இந்திய வெளியுறவு அதிகாரிகள் தரப்பில் மறுப்பு வெளியாகியுள்ளது.

**கனடா விசாரணைக்கு இந்தியா ஒத்துழைக்க வேண்டும் - அமெரிக்கா**

இதேவேளை, ''நிஜார் கொல்லப்பட்ட விவகாரத்தில் கனடா மேற்கொண்டு வரும் விசாரணைக்கு இந்தியா ஒத்துழைப்பளிக்க வேண்டும்'' என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் என்டனி பிளிங்கன் தெரிவிக்கையில்,

கனேடிய பிரதமர் எழுப்பியுள்ள குற்றச்சாட்டு மிகுந்த கவலையளிக்கிறது. இந்த விவகாரத்தில் கனேடிய அதிகாரிகளுடன் அமெரிக்கா தொடர் ஆலோசனைகளை மேற்கொண்டு வருவதோடு, புலனாய்விலும் ஒத்துழைப்பை அளித்து வருகிறது. கனடாவின் இந்த புலனாய்வு விசாரணை மிக முக்கியமானது என்பதோடு, இந்த விசாரணையில் இந்தியாவும் இணைந்து பணியாற்ற வேண்டியதும் முக்கியம். எனவே, இதற்கு காரணமானவர்கள் பொறுப்பேற்பது மிக அவசியம் என்று பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

**அமெரிக்க ஆதரவு இந்தியாவுக்குதான்**

''இந்திய உறவா அல்லது கனேடிய உறவா என முடிவெடுக்க வேண்டிய நிலை வந்தால், அமெரிக்கா இந்தியாவுக்குதான் ஆதரவளிக்கும் என்று அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் தெரிவித்தார்.

கனடாவின் வான்கூவர் நகரில் காலிஸ்தான் பிரிவினைவாதியான ஹர்தீப் சிங் நிஜார் (வயது 45) கடந்த ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பிருப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளிப்படையாக குற்றம்சாட்டினார். இதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.



இந்நிலையில், இந்த பிரச்சினையில் தங்களோடு இணையுமாறு அமெரிக்காவுக்கு கனடா அழைப்புவிடுத்தது. இதுகுறித்து அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின் தெரிவித்துள்ளதாவது,

''கனடாவின் இந்த குற்றச்சாட்டு, இந்தியாவை விட கனடாவுக்குத்தான் அதிக அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திய உறவா அல்லது கனேடிய உறவா என முடிவெடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அமெரிக்கா இந்தியாவுடன்தான் துணை நிற்கும்.

இரண்டு நண்பர்களுக்கிடையில் நாம் தெரிவு செய்ய வேண்டியிருந்தால், நிஜார் ஒரு தீவிரவாதி என்பதாலும் இந்தியா மிகவும் முக்கியமானது என்பதாலும் இந்த விடயத்தில் இந்தியாவைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம். இந்தியாவுடனான உறவு எங்களுக்கு முக்கியமானது. கனடா, இந்தியாவோடு சச்சரவில் ஈடுபடுவது, ஒரு எறும்பு, யானையுடன் சண்டையிடுவது போலாகும். தனது குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரத்தை தர பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் முடியவில்லை. இந்தியாவால் தீவிரவாதி என முத்திரை குத்தப்பட்ட ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தது எதற்காக என்பது தொடர்பாக கனடா விளக்க கடமைப்பட்டுள்ளது. பிளம்பராக வேலை செய்து வந்த கொல்லப்பட்ட நிஜார் ஒன்றும் சுத்தமான மனிதரல்லர். அவரது கரங்கள் இரத்தக்கறை படிந்தவை. போலி பாஸ்போர்ட் மூலம் கனடாவுக்கு வந்தவர்தான் நிஜார்'' - இவ்வாறு மைக்கேல் ரூபின் தெரிவித்துள்ளார்.

காலிஸ்தான் விவகாரத்தில் இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்க முன்னாள் அதிகாரியொருவர் இவ்வாறு தெரிவித்துள்ளமை கனடாவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

**சொத்துகள் பறிமுதல்: என்.ஐ.ஏ. அதிரடி**

தடை செய்யப்பட்ட பிரிவினைவாத அமைப்பை சேர்ந்த குர்பத்வந்த் சிங் பன்னூன் வெளியிட்ட வீடியோவில், கனடாவில் இருக்கும் இந்தியர்களே வெளியேறுங்கள். இந்தியாவுக்கு திரும்பிச் செல்லுங்கள் என்று அச்சுறுத்தல் விடுத்திருந்தார். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இந்நிலையில் இந்தியாவில் உள்ள அவரது சொத்துகளை என்.ஐ.ஏ. அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். அமிர்தசரஸிலுள்ள குர்பத்வந்த் சிங்கின் பூர்வீக கிராமமான கான்கோட்டில் விவசாய நிலம், வீட்டை என்.ஐ.ஏ. கையகப்படுத்தியுள்ளது. இனி இவை அரசுக்கு சொந்தமானதாகும்.

**இந்தியா கருத்து**

கனடாவுக்கான முன்னாள் இந்திய தூதுவர் விகாஸ் ஸ்வரூப் கூறுகையில், ''கனடா சர்ச்சையை தவிர்க்க வேண்டும். குற்றம் நிரூபிக்கப்படும் வரை அனைவரும் நிரபராதிகள். சட்டத்தின் ஆட்சி அதன் போக்கில் செல்வதற்கு அனுமதிக்கவேண்டும். உண்மை பொதுவெளியில் வர அனுமதியுங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.



மும்பை கடற்கரையில் கரைக்கப்பட்ட விநாயகர் சிலை...

## தமிழக மீனவர்கள் நால்வர் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல்



நாகை மாவட்டம் செருதூர் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தி ரூ.3 இலட்சம் மதிப்புள்ள 500 கிலோ வலை, ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள மீன்கள், ஜிபிஎஸ் கருவி, 4 செல்போன்களை திருடிச்சென்று அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ள சம்பவம் மீனவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய எல்லையில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்துவது வாடிக்கையாகி வருகிறது. புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி சில நாட்களே கடந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை நாகை மாவட்ட மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாகை மாவட்டம் செருதூர் கிராமத்தை சேர்ந்த சபாபதி என்பவரது பைபர் படகில் அவருடைய மகன்கள் பிரதீப், பிரகாஷ், பிரவின், திருமுருகன் உள்ளிட்ட 04 பேர் கடந்த 21ஆம் திகதி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

இந்நிலையில், சனிக்கிழமை இரவு 8 மணிக்கு கோடியக்கரை தென்கிழக்கு பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்தநிலையில், இந்திய எல்லைக்குள் அத்துமீறி அதிவேக படகில் புகுந்த இலங்கை கடற்கொள்ளையர்கள் நாகை மீனவர்களிடம் கத்தி முனையில் மீன்கள் மற்றும் தளவாட பொருட்களை கேட்டு மிரட்டியுள்ளனர்.

அப்போது மீனவர்கள் அங்கிருந்து தப்பிக்க முயன்றபோது அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் தமிழக மீனவர்களின் படகில் பாய்ந்து தாக்குதலை நடத்தியுள்ளனர்.

பின்னர், கத்தி முனையில் தமிழக மீனவர்களின் ரூ.3 இலட்சம் மதிப்புள்ள 500 கிலோ வலை, ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள மீன்கள், ஜிபிஎஸ் கருவி, 4 செல்போன்களை இலங்கை கடற்கொள்ளையர்கள் பறித்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

பின்னர், படுகாயங்களுடன் செருதூர் மீன் இறங்குதளத்துக்கு சென்றநிலையில் அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து இந்திய கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்துவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தொழில் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய அரசும் தமிழக அரசும் இலங்கை கடற்கொள்ளையர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாகை மாவட்ட மீனவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## 'பிஸ்மில்லாஹ்' எனக் கூறி பன்றிக்கறி சாப்பிட்ட பெண்

### 02 ஆண்டுகள் சிறை உத்தரவு பிறப்பித்த இந்தோனேஷிய நீதிமன்றம்





முஸ்லிம்கள் சாப்பாட்டுக்கு முன்னர் சொல்லும் 'பிஸ்மில்லாஹ்' என்ற வர்த்தையை பன்றிக்கறி சாப்பிட்டு அதனை வீடியோவாக வெளியிட்ட பெண்ணுக்கு இந்தோனேஷியாவில் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷிய டிக்டொக் பிரபலமான லினா முகர்ஜி (வயது 33) அவ்வப்போது வீடியோக்கள் வெளியிட்டு வருகிறார். இவரை ஏராளமானோர் பின் தொடர்ந்து வருகின்றனர். இந்நிலையில் லினாவின் டிக்டாக் பக்கத்தில் கடந்த மார்ச் மாதம் எடுக்கப்பட்ட வீடியோவொன்று சமீபத்தில் வைரலானது.

அந்த வீடியோவில் லினா, தனது கையில் பன்றி இறைச்சித் துண்டை வைத்துக் கொண்டு அதனை முஸ்லிம்கள் சாப்பிடுவதற்கு முன்னர் கூறும் 'பிஸ்மில்லாஹ்' என்ற வார்த்தையை சொல்லி சாப்பிடுகிறார். 'பிஸ்மில்லாஹ்' என்பதற்கு அரபியில் 'இறைவனின் பெயரால்' என்று அர்த்தம். இந்த வார்த்தையை பயன்படுத்தி இஸ்லாம் மதத்தில் தடை செய்யப்பட்ட உணவான பன்றிக்கறியை லினா முகர்ஜி சாப்பிட்ட வீடியோ அங்கு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பலரும் அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமூக வலைதளங்களில் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனையடுத்து, இந்தோனேஷிய பொலிஸாரால் லினா முகர்ஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பாலேம்பாங் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 250 மில்லியன் ருபையா அபராதமும் விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர். பாலி தீவுக்கு சுற்றுலா சென்றபோது ஆர்வத்தில் அப்படி ஒரு வீடியோவை எடுத்ததாக லினா நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## மெக்சிகோ பொலிஸாரால் பேய் பொம்மை கைது





'சக்கி டோல்' எனப்படும் பேய் பொம்மையை வைத்து பொதுமக்களை அச்சுறுத்தி வந்த நபரையும் அவருடனிருந்த பொம்மையையும் மெக்சிகோ பொலிஸார் கைது செய்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

மெக்சிகோவின் கோஹுயிலா மாகாணத்திலுள்ள மொன்க்லோவா நகரத்தில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் கார்லோஸ் என்ற நபர் பொம்மையொன்றின் கையில் கத்தியை வைத்து வீதியில் செல்வோர் மீது தூக்கி வீசி பணம் கேட்டு மிரட்டியுள்ளார். இதுகுறித்த தகவலறிந்த பொலிஸார் விரைந்து வந்து கார்லோஸை கைது செய்தனர்.

மேலும் அவரிடம் இருந்த அந்த பொம்மைக்கும் கைவிலங்கிட்டு கைது செய்தனர். இந்த விநோத சம்பவம் சமூக வலைதளங்களில் வைரலானது. பொம்மையை வைத்து பொதுமக்களை அச்சுறுத்திய கார்லோஸ் போதைப்பொருள் உட்கொண்டிருந்தது விசாரணையில் தெரியவந்தது. மேலும் உள்ளூர் நிருபர்கள் சிலர் விளையாட்டுத்தனமான அந்த பொம்மைக்கு கைவிலங்கு போடுமாறு கூறியதால், பொலிஸ் அதிகாரியொருவர் விளையாட்டாக அந்த பொம்மையையும் கைது செய்ததாகவும் தற்போது அந்த அதிகாரி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாகவும் மான்க்லோவோ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட அந்த பொம்மை 'சைல்ட்'ஸ் ப்ளே' ஹொலிவூட் படவரிசையில் வரும் 'சக்கி டோல்' எனப்படும் பேய் பொம்மையாகும். விகாரமான முகம் கொண்ட இந்த பொம்மை உலகளவில் பிரபலமானது. 'சைல்ட்'ஸ் ப்ளே 1,2,3, 'கல்ட் ஆஃப் சக்கி', 'தி டோல்ஹவுஸ்', 'கர்ஸ் ஆஃப் சக்கி', 'ப்ரைட் ஆஃப் சக்கி' உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் இந்த பொம்மை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக செய்திகள்

### பாகிஸ்தானில் வறுமைக்கோட்டின்கீழ் 40 சதவீத மக்கள்

பாகிஸ்தானில் கிட்டத்தட்ட 40 சதவீத மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே வாழ்வதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இந்த மக்கள் அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல் பரிதவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரே ஆண்டுக்குள் 34 சதவீதமாக இருந்த பாகிஸ்தானின் வறுமைக்கோட்டின் அளவு இப்போது 40 சதவீதமாக உயர்ந்துள்ளது.

32 முதல் 40 சதவீதம் வரை ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த பாகிஸ்தான் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் உலக வங்கி வலியுறுத்தியுள்ளது.

### கூகுள் மேப்பை பின்பற்றி உயிரைவிட்ட அமெரிக்கர்



அமெரிக்காவில் கூகுள் மேப்பை பின்பற்றி உடைந்த பாலத்தின் மீது காரில் சென்ற நபர், பாலத்தின் விளிம்பில் 20 அடி உயரத்திலிருந்து காருடன் வீழ்ந்து உயிரிழந்ததால் கூகுள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வடக்கு கெரோலினா மாகாணத்தில் கடந்த ஆண்டு செப்டெம்பரில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக உயிரிழந்த நபரின் மனைவி வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில், பாலம் உடைந்து ஓராண்டுக்கும் மேலாக பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக கூகுளுக்கு பலர் தகவல் கூறியும் அது கூகுள் மேப்பில் அப்டேட் செய்யப்படவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது கணவரின் மரணத்துக்கு பின்னரும் கூகுள் மேப் அப்டேட் செய்யப்படவில்லை என்றும் உடைந்த பாலத்தில் பயணிக்க தொடர்ந்து வழிகாட்டுவதாகவும் அவர் கூறியுள்ளார். இந்த தவறு குறித்து மதிப்பாய்வு செய்து வருவதாக கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# ஒற்றுமை சீர்குலைக்கப்பட்டால் கிழக்கில் தமிழர் நிலை மோசமாகும்

## தவராசா கலையரசன் எம்.பி.தெரிவிப்பு

வாழைச்சேனை, களுதாவளை செய்தியாளர்கள்



எச்சந்தர்ப்பத்திலும் எமது ஒற்றுமை சீர்குலையக் கூடாது என்று கருதுபவன் நான். ஏனெனில் அவ்வாறு ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழர்களின் நிலை மோசமாகும். அதிலும் அதிகம் பாதிக்கப்படப்போகின்ற மாவட்டங்களாக அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாண்டிருப்பில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒற்றுமை என்ற விடயத்தில் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றோம். ஒற்றுமையென்பது அரசியல்வாதிகளிடமும் இல்லை, மக்களிடமும் இல்லை என்ற ரீதியில் அழிவின் விழிம்பில் நின்றுகொண்டிருக்கின்றோம். இந்தியாவிலே சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக இருக்கின்றார்கள். புலம்பெயர் தேசங்களிலே இலங்கைத் தமிழர்கள் சுமார் இருபது இலட்சம் பேர் வரை வாழ்கின்றார்கள். இந்நிலையில் எங்களிடம் ஒற்றுமை இல்லையென்றால் எமது எதிர்காலம் எங்கே போய் முடியும். கிழக்கு மாகாணத்திலே விகிதாசாரத்தில் முஸ்லிம்கள் மார்தட்டிப் பேசுகின்றார்கள். இந்நிலை நீடித்தால் எதிர்காலத்தில் கிழக்கு மண் எமது கைகளில் இருந்து விடுபடக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள எவ்வாறு இந்த நாட்டிலே வாழப்போகின்றோம், எமது மக்களுக்கான தீர்வு என்ன என்ற விடயத்திலே நாங்கள் தொடர்ச்சியாகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ரீதியில் செயற்படும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எதிர்காலத்திலும் ஒருமித்துச் செயற்படும். அந்த ஒற்றுமையை நாங்கள் பலப்படுத்துவோம். எந்த சந்தர்ப்பத்திலும் அந்த ஒற்றுமை சீர்குலையக் கூடாது என்று கருதுபவன் நான். ஏனெனில் எங்களுக்கிடையில் ஒற்றுமை சீர்குலைக்கப்படுமானால் கிழக்கில் தமிழ் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வார்கள். அதிலும் அதிகம் பாதிக்கப்படப்போகின்ற மாவட்டங்களாக அம்பாறை ,திருகோணமலை மாவட்டங்களே இருக்கும் என்பதை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். தேர்தல் முறைமை காரணமாக சில நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த அடிப்படையில் எம்முடன் இணைந்திருந்த கட்சிகள் புதிய கட்சியொன்றை அமைத்துள்ளன. அது நீடிக்கப் போகின்ற விடயமல்ல. மீளவும் நாங்கள் கூட்டாக ஒற்றுமையாகச் செயற்படுவோம். அவ்வாறில்லாவிட்டால் கிழக்கில் தமிழ் மக்களே மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவோம் என்றார்.



திருகோணமலை, பாலையூற்று சீரடி நாக சாயி சந்நிதானத்தின் குடமுழுக்கு ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு சமய அனுஷ்டானங்கள் இடம்பெற்றன. இந்நிகழ்வில், கொழும்பு, புதுச்செட்டித் தெரு சீரடி சாயி ஆலய தலைமை அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன், பாலையூற்று திருவடி நிழல் ஆசிரம பயன்பாட்டுக்கென தையல் இயந்திரமொன்றை ஆசிரம ஆதீனகர்த்தா வரலக்ஷ்மி அம்மையாரிடம் கையளித்தார்.

# கல்லடி விவேகானந்தாவுக்கு வாத்திய கருவிகள் கையளிப்பு







கல்லடி செய்தியாளர்

விவேகா பழைய மாணவர் சங்கத்தினால் கல்லடி, உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரிக்கு 750,000 ரூபா பெறுமதியான வாத்தியக் கருவிகள் மற்றும் ஹொக்கி விளையாட்டு உபகரணங்கள் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (22) பாடசாலையின் ஜோசப் பரராசசிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது மேற்படி உபகரணங்கள் பாடசாலை அதிபர் நவகீதா தர்மசீலனிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு, கல்லடி ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரார்ச்சிதானந்தாஜீ மஹராஜ் பிரதம அதிதியாகவும் கிழக்குப் பல்கலைக்கழக ஹொக்கி பயிற்றுவிப்பாளர் கிருஷ்ணபிரபு சிறப்பு விருந்தினராகவும் நிதி அனுசரணையாளர்களின் நேரடி உறவினர்கள் , சிவானந்தா பழைய மாணவர் சங்கத்தினர் ,சித்தி விநாயகர் -பேச்சி அம்மன் ஆலய பொருளாளர் , விவேகா பழைய மாணவர்கள் ,விவேகா நிர்வாக சபை உறுப்பினர்கள் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் நன்றி நவிலல் நிகழ்வு





அட்டாளைச்சேனை செய்தியாளர்

இம்முறை வெளியான உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைவாக, அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியிலிருந்து பொறியியல் பீடத்துக்கு தகுதி பெற்றுள்ள லாபீர் பாத்திமா மர்வா ஏற்பாடு செய்த , தனக்கு கல்வி புகட்டிய ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோருக்கான நன்றி நவிலல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை(22) கல்லூரியின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் குறித்த மாணவிக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பாடசாலையின் முகாமைத்துவப் சபையினர், பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் சபூர் ஆதம், மாணவியின் தந்தை எஸ்.எம்.லாபீர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

உயர்தரப் பரீட்சையில் குறித்த மாணவி அனைத்துப் பாடங்களிலும் ஏ தரச் சித்தி பெற்று இப்பாடசாலையிலிருந்து பொறியியல் பீடத்துக்கு தகுதி பெற்றுள்ளார்.

நன்றி உணர்வோடு தமது பாடசாலை அதிபர்,ஆசிரியர்கள் போன்றோரை கௌரவிக்கும் வகையில் இம்மாணவி தனது பெற்றோர் சகிதம் பாடசாலைக்கு நேரடியாக சமுகமளித்து தமது நன்றி வெளிப்பாட்டை மேற்கொண்டமை எமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என அதிபர் ஏ.எச்.பௌஸ் தெரிவித்தார்.

இதன்போது மாணவியினால் பாடசாலைக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் பயிற்சிப் பட்டறை



இஸ்மாயில்புரம் செய்தியாளர்

உலக உதவித் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அம்பாறை மாவட்ட அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப் பட்டறை அம்பாறையில் அண்மையில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் பிரதேச செயலக மட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காகப் பேணப்படும் அனர்த்த பாதுகாப்புத் திட்டத்தின் இணையத் தகவல் அமைப்பில் உள்ளடக்கப்படும் வகையில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் பிரகாரம் அம்பாறை மாவட்ட நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கான இந்த பயிற்சி பட்டறை மாவட்ட நிவாரண சேவை அதிகாரி ஏ.ஜி. ஹசிக மாதவ மற்றும் ஏ. முஹம்மது பெரோஸ் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சரப் விளையாட்டுக் கழக சீருடை அறிமுகம்



அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்

அட்டாளைச்சேனை சரப் விளையாட்டுக் கழகத்தின் சீருடை அறிமுகமும் அலுவலகத் திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை 10ஆம் பிரிவில் ஐ.எம்.நௌசாட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சரப் கழகத்தின் புதிய சீருடையை ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் பிரதம ஆலோசகர் அதிபர் எம்.ஜே. அன்வர் நௌசாட் கழக வீரருக்கு வழங்கி அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் அதிபர் எம்.ஏ.அன்சார் உட்பட கழகத்தின் பதவி வழி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் கலாசார இலக்கிய போட்டி







திராய்க்கேணி செய்தியாளர்

அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்குட்பட்ட 15 தொடக்கம் 18 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கான கலாசார இலக்கிய போட்டி அக்கரைப்பற்று அல் முனவ்வரா பாடசாலையில் சமுர்த்தி தலைமை முகாமையாளர் எம். ஜே. எம். நிஹ்மத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். மாவட்ட சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்களான கே. நேசராசா, எம். இஸ்மாயில், குணதிலக, முகாமையாளர்களான எம். தஸ்லிம், யூ.கே. நளீம் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ. சபாயித்தீன், ஏ. எஸ். எம். உனைஸ்,எஸ். ஏ. எம். அமீன், எம்.ஐ.எம். இஸ்மாயில், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் விஷேட கூட்டம்





கோணாவத்தை செய்தியாளர்

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் விஷேட கூட்டம் அக்கரைப்பற்று காரியாலயத்தில் மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நேற்று(24)இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம்.ஹாசிம், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

சாரணர் விழிப்புணர்வு செயலமர்வு, நட்பு மேம்பாட்டு திட்டம், மத ரீதியான நிகழ்வு, சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பு, அனர்த்த முகாமைத்துவ குழு நியமித்தல் போன்ற திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தெரிவித்தார்.





ஆரையம்பதி-03, அருள்மிகு வெள்ளை மணல் ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலய தேரோட்டத் திருவிழாவின் போது முனைவர் பட்ட ஆய்வாளர் வசந்தி நேருவின் நெறிப்படுத்தலில் அரங்கேற்றப்பட்ட நிருத்தாஞ்சலி நாட்டிய நிகழ்வில் பங்கேற்ற நிருத்திய கலாலய மாணவிகள், யுவகலாரெட்ணா சர்வதேச விருது பெற்ற யாழ். இராமநாதன் பல்கலைக்கழக மாணவிகளான ப. கிஷானி, சு. ஷாருன்யா, ரா. ரக்ஷிதா, பி. தர்ஷிகா ஆகியோருக்கும் ஓய்வு நிலை நடன ஆசிரியை முனைவர் பட்ட ஆய்வாளர் வசந்தி நேருவுக்கும் ஆரையம்பதி ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினரால் "நாட்டிய கலைஞான சுடர் " விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். படங்கள்:ஆரையம்பதி செய்தியாளர்

# மேய்ச்சல்தரைக் காணி அபகரிப்பை நிறுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைரெத்தினம் தெரிவிப்பு

எருவில் செய்தியாளர்



மாதவனை, மயிலத்தமடு மேய்ச்சல் தரைக் காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்று கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று, செங்கலடி, கோறளைப்பற்று தெற்கு மற்றும் கிரான் ஆகிய இரண்டு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பல தசாப்தங்களாக அண்ணளவாக 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் மேய்வதற்குரிய மேய்ச்சல் தரையாக சுமார் 25ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளை கால்நடைப் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மேற்குறித்த மேய்ச்சல்தரைக் காணியானது அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களை அமுல்படுத்துகின்ற அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்,மாவட்ட,மாகாண மத்திய நீர்ப்பாசனம்,விவசாயம்,கால்நடைத் திணைக்களம்,மகாவலி,வனவிலங்குத் திணைக்களம் உள்ளிட்ட அமைப்புகள் அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெறும் மாவட்ட விவசாய அபிவிருத்திக்குழுக் கூட்டம்,பிரதேச செயலாளர் தலைமையில் இடம்பெறும் விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் போன்றவற்றில் முடிவுகளை எடுத்து மேற்குறித்த இரு பிரதேச செயலகங்களிலும் உள்ள இடங்களைத் தெரிவு செய்து ஒரு வருடத்தில் இரண்டு தடவைகள் அங்கு கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இம் முடிவானது அரசாங்கத்தின் கொள்கையைத் தவிர தெருவில் செல்பவர்களின் கொள்கையல்ல. இத்தகைய கொள்கைகளை அமுல்படுத்துவதும் நடைமுறைப் படுத்துவதும் அரச நிர்வாகமே.

தீர்மானிக்கப்பட்ட இடங்களான ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஈரலக்குளம்-201 ஏ கிராமசேவகர் பிரிவுகளில் வெள்ளைக்கல், மேசைக்கல், புலூட்டுமானோடை, (மயிலத்தமடு, மாதவணை) ஒரு பகுதி கித்துள்வெவ -185 பி கிராமசேவகர் பிரிவில் புலியடிப்பொத்தாணை, கோப்பாவெளி-146 சி கிராமசேவகர் பிரிவில் கிடாரம்போட்டமடு, கொட்டான்கச்சி, கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குடும்பிமலை-209 டி கிராமசேவகர் பிரிவில் மாதவணை, மயிலத்தமடு, அம்புமுனை, ஆமிமடு, அலியாரோடை, முருங்கையடிபட்டி, அத்தினக்கல்வெட்டை, குமாரவேல் வெட்டை நெலிகல், எழுவாரோடை, வடமுனை-210 ஏ கிராமசேவகர் பிரிவில் மீராண்டாவில்

இப்படி தீர்மானிக்கப்பட்ட பல இடங்களில் கிராம சேவகர் பிரிவிலுள்ள மாதவணை மயிலத்தமடு இடங்களிலுள்ள குறிப்பிட்ட ஏக்கர் காணிகளில் எமது மாவட்ட எல்லைக்கப்பாலுள்ள பெரும்பான்மை சகோதர சிங்கள இனத்தவர்கள் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் காணிகளை துப்புரவு செய்து தற்காலிக கூடாரங்களை அமைத்து விவசாயச் செய்கைகளிலும் கால்நடைகளை சுடுவதும் கால்நடைகளுக்கு சுருக்கு வைப்பதும், கால்நடைப் பண்ணையாளர்களை அச்சுறுத்துவதும் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பான விடயங்களை கால்நடைப் பண்ணையாளர்கள் நேரடியாகச் சென்று தடுக்கும் பட்சத்தில் இன முரண்பாடுகள் ஏற்படும். இதன் காரணமாக கால்நடைப் பண்ணையாளர்கள் கிராமசேவையாளர்,பிரதேச செயலாளர், ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு மக்கள் பிரதிநிதிகளிடம் முறைப்பாடுகள் செய்தும் கால்நடைகளுக்குரிய காணிகளை துஷ்பிரயோகம் செய்வது தொடர்ந்து கொண்டே உள்ளது.

இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் விவசாயச் செய்கைகள், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, வேளாண்மைசெய்கைகள் ஆரம்பிக்கப்பட்டு திகதிகளும் நிர்ணயிக்கப் பட்டுள்ளதால் உரிய நேரத்துக்கு கால்நடைகளைக் கொண்டுசெல்ல வேண்டும். கால்நடைப் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தி வரும் காணிகள் அடாத்தாகப் பிடிக்கப்படுவதனால் கால்நடைகளை எங்கு கொண்டு செல்வது என கால்நடைப் பண்ணையாளர்கள் கேள்வி கேட்கின்றனர்.

இப்பிரச்சினைகளை சட்ட ரீதியாக எதிர் கொள்ளாத பட்சத்தில் இன முறுகல் ஏற்படும். அரச நிர்வாகிகள் தலையிடும் பட்சத்தில் அரச நிர்வாகிகளுக்கு எதிராக சிங்கள அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

எனவே, ஆளுந்தரப்பபைச் சேர்ந்த அமைச்சர்கள் நல்லுறவுடன் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு நிறுத்த வேண்டும். அல்லது பிரதேச செயலளர்,அரசாங்க அதிபர்,நலன் விரும்பிகள் நீதிமன்றம் ஊடாக அகற்றுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண பொதுச்சேவை உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இடமாற்றம்

ஒலுவில் மேலதிக நிருபர்

கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த (2024)இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ. மன்சூர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாண பொதுச் சேவை உத்தியோகத்தர்களுக்கான புதிய இடமாற்றங்கள் 2024 மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் செயற்படும். அதற்கேற்ற வகையில் இடமாற்ற உத்தியோகத்தர்கள் விடுவிப்புச் செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பான விபரமடங்கிய சுற்று நிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுகளின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரு நிலையத்தில் தொடர்ச்சியாக பல வருடங்களாக சேவையாற்றிவருகின்ற முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாரதிகள் சேவை, அலுவலகப் பணியாளர் சேவை, தொழில்நுட்ப உத்தியோகத்தர் சேவை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் சேவை என்பவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.இவ்வருடம் வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பிப்போர் இணையவழி விண்ணப்ப முறையினூடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கத் தகுதியுடைய அலுவலகர்கள் www.ppaep.lk எனும் இணையப்பக்கத்தினூடாக அல்லது கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இணையவழி மூலம் விண்ணப்பித்ததன் பின்னர் விண்ணப்பப் படிவத்தை தரவிறக்கம் செய்து அதன் பிரதிகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப் பிரதம செயலாளர்(நிர்வாகம்), பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், கன்னியா வீதி வரோதய நகர், திருகோணமலை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்முனை தென்மேற்குப் பிரதேச பெரும்போக நெற்செய்கை கூட்டம்



கல்லடி,களுதாவளை செய்தியாளர்கள்

மண்முனை தென்மேற்குப் பிரதேச பெரும்போக நெற்செய்கை தொடர்பான ஆரம்பக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா தலைமையில் மண்முனை தென்மேற்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலாளர், கமநல சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், விவசாயத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர், வனவிலங்கு திணைக்கள உத்தியோகத்தர்கள், வன பரிபாலன சபைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை உத்தியோகத்தர்கள், கிராம சேவகர்கள், வங்கி உத்தியோகத்தர்கள், காப்புறுதி நிறுவன உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் தலைவர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பெரும்போக நெற்செய்கைக்கான திகதியும் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் காலத்தில் பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் பிரதேச செயலாளிடமும் கிராம சேவகர்களிடமும் உரிய தரப்பினர் முறைப்பாடு செய்து உரிய தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

விவசாயிகளுக்கான மானியம் வழங்கல் தொடர்பாகவும் ஆராயப்பட்டதோடு உரிய காலப்பகுதியில் மானியம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த போகத்தில் விநியோகிக்கப்பட்ட உர மானியத்துக்கான வவுச்சரைப் பயன்படுத்தாதவர்கள் உரிய கமநல சேவைகள் திணைக்களத்துக்குச் சென்று பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டதுடன், பெரும்போக நெற்செய்கைக்கான உர விநியோகம் சீராக இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பெரும்போக நெற்செய்கைக்கான விதை நெல் கையிருப்பில் இருப்பதாக உரிய திணைக்கள அதிகாரிகளின் இதன்போது சுட்டிக்காட்டினர்.

அத்துடன், காட்டு யானைகளின் அட்டகாசம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. யானை வேலிகள் அமைப்பதற்காக விவசாய அமைப்புகளினால் பணம் சேகரித்து வழங்கப்பட்டுள்ளபோதும் அதற்கான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படாமை தொடர்பாகவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்போது வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டதோடு அனைத்து விவசாய அமைப்புகளிடமிருந்தும் பணத்தைப் பெற்றதன் பின்னர் யானை வேலி அமைக்கும் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்குமாறும் வலியுறுத்தப்பட்டது.

# குடியிருப்பு கலைமகள் மகா வித்தியாலயத்தின் நடைபவனி



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு, குடியிருப்பு கலைமகள் மகா வித்தியாலயத்தின் 141ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நடைபவனி சனிக்கிழமை (23) இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ்.டி. முரளிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவிகள், பழைய மாணவிகள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## அலுவலக சேவையை மேம்படுத்தும் நோக்கில்

# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் முன்னிலை அலுவலகம் திறப்பு

பொத்துவில் நிருபர்



கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு தேவை நிமித்தம் வருகைதரும் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி பணிமனையின் கீழ் தளத்தில் முன்னிலை அலுவலகமொன்று (Front Office) திறந்து வைக்கப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களினதும் சுகாதார உத்தியோகத்தர்களினதும் நலன்கருதி பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவரும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, அலுவலக சேவையை மேம்படுத்தும் நோக்கில் புதிய நடைமுறை ஒன்றை முன்னெடுத்துள்ளது.

அந்தவகையில் தினமும் பணிமனைக்கு வருகைதரும் சுகாதார உத்தியோகத்தர்களின் கடமை ரீதியானதும் பொதுமக்களின் சுகாதார தேவைகளையும் சிரமமின்றி நிறைவேற்றிக் கொடுப்பதை நோக்காகக்கொண்டு குறித்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குத் தேவை நிமித்தம் வருகை தருகின்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலை அலுவலகத்திலே தங்களது தேவைகளையும் பிரச்சினைகளையும் கூறி அதற்குரிய தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அந்த முன்னிலை அலுவலகத்தில் கடமையில் இருக்கின்ற உத்தியோகத்தர் குறித்த தேவையுடையவரின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரி அல்லது உத்தியோகத்தரின் கவனத்துக்கு கொண்டு செல்வார்.

குறித்த தேவையுடையவர் விடயத்துகுரிய அதிகாரி அல்லது உத்தியோகத்தரைச் சந்தித்து தனது தேவையை நிறைவு செய்ய முடியும் எனக் கருதினால் குறித்த அதிகாரி அல்லது உத்தியோகத்தர் முன்னிலை அலுவலகத்துக்கு வருகை தந்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

தற்போது தேவை நிமித்தம் பிராந்திய பணிமனைக்கு வருபவர்கள் அதிகாரிகளையோ அல்லது உத்தியோகத்தர்களையோ சந்திப்பதற்கு அதிகநேரம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளராக பதவியுயர்வு



ஆரையம்பதி செய்தியாளர்

மட்டக்களப்பு மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற நாகலிங்கம் அருட்செல்வன் தமது கடமைகளை அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் 1993 ஆம் ஆண்டு மக்கள் வங்கி எழுதுநராக நியமனம் பெற்று மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை போன்ற இடங்களில் பரவலாகத் தனது 30 வருட கால சேவையைப் பூர்த்தி செய்து அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றார். இவர் அமரர் அன்புமணியின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# போடியார் புலம்பல்!



*குற்றத்தை நிரூபித்தா தாம் தூக்குமேடைக்கு போகவும் தயாராம் எண்டு அந்த கொட்டப்பாக்கன் பிள்ளையான் பாராளுமன்றத்தில விளாசித்தள்ளி இருக்காரு எலுவா...?*

*அந்தப்பொடியன் சொல்லுறது சரி. இலங்கையில தூக்கு தண்டன இல்ல மற்றது அப்படி சிறயில தள்ளினாலும் அடுத்த திட்டத்த சோக்கா செய்யலாம். இல்லாட்டி பிறான்சில புகலிடம் பெற்ற கழுதாவளை ஞானம் தோழரக்கொண்டு ஒரு புத்தகம் வெளியிடலாம் எண்ட எண்ணமோ...?*

*அடே சின்னப்பயலே நீ செய்த அத்தன நாசமறுப்புக்கும் ஒனக்கு கடவுள் தீர்ப்பு கிடைக்காம போகாது மகனே...!*

# மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஓவியக் கண்காட்சி



களுதாவளை செய்தியாளர்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவனமும் இணைந்து நடத்திய கிழக்கின் ஓவியத் திருவிழா கடந்த 21, 22, 23 ஆம் திகதிகளில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வில் பிரதம அதிதிகளாக கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி, பல்கலைக்கழக பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், மாவட்ட செயலக கலாசார உத்தியோகத்தர் ரீ.மலர்ச்செல்வன் என பலர் கலந்துகொண்டனர்.

மூன்று நாட்கள் இடம்பெற்ற இவ் ஓவிய கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்கள் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தலைசிறந்த ஓவியர்களினால் வரையப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியாவில் மருத்துவ முகாம்

கந்தளாய் செய்தியாளர்



கிண்ணியா நகர சபை ஏற்பாடு செய்து நடத்திய நகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கான மருத்துவ முகாம் நகரசபை வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கிண்ணியா தள வைத்தியசாலையின் வைத்தியர் எம்.எஸ்.சவ்பான் தலைமை யிலான வைத்திய குழுவினரால் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

# 19ஆவது ஆசிய விளையாட்டு விழா

## பாகிஸ்தானை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற இலங்கை

### தங்கப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் இந்தியாவுடன் இன்று மோதல்

ஏ அகீல் சிஹாப்

சீனாவின் ஹாங்சூ நகரில் நடைபெற்று வரும் 19ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் நேற்று பாகிஸ்தான் மகளிர் அணியை வீழ்த்திய இலங்கை மகளிர் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. அதன் அடிப்படையில், இலங்கை அணி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றால் தங்கப் பதக்கத்தை சுவீகரிக்கும் அதேவேளை, தோல்வியடைந்தால் வெள்ளிப் பதக்கத்தையாவது பெறும் வாய்ப்பு காணப்படுகிறது.

நேற்று நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி



பெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் மகளிர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்களை இழந்து 75 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இலங்கை அணியின் பந்துவீச்சில் உதேசிக பிரபோதனி மூன்று விக்கெட்களையும் கவிசா டில்ஹாரி இரண்டு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

76 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி 16.3 ஓவர்கள் நிறைவில் 04 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அதனடிப்படையில், இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்று இன்றைய தினம் நடைபெறும் இறுதிப் போட்டியில் இந்திய மகளிர் அணியை எதிர்கொள்கிறது. மறுமுனையில் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் முதலாவது மற்றும் இரண்டாவது அரையிறுதி ஆட்டங்களில் தோல்வியடைந்த பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் மகளிர் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6:30க்கு ஆரம்பமாகும் நிலையில், இறுதிப்போட்டி பகல் 11:30 மணிக்கு ஆரம்பமாகும்.

## விளையாட்டுத் துளிகள்

அடுத்த ஆண்டு அமெரிக்காவும் மேற்கிந்திய தீவுகளும் இணைந்து ரி20 உலகக்கிண்ணத் தொடரை ஜூன் 4 முதல் 30 வரை நடத்துகிறது. இந்நிலையில் போட்டிகள் நடைபெறும் இடங்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. மேற்கிந்திய தீவுகளில் ஆன்டிகுவா-பார்புடா, பார்படாஸ், கயானா, செயின்ட் லூசியா, செயின்ட் வின் சென்ட், டிரினிடாட்-டுபாகோ ஆகிய இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதேபோல் அமெரிக்காவின் டல்லாஸ், புளோரிடா மற்றும் நியூயோர்க் ஆகிய இடங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன.

........................

ஐ.சி.சி. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கான பரிசுத்தொகையை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. அதன்படி சம்பியனாகும் அணிக்கு 04 மில்லியன் டொலர்கள் கிடைக்கும். இறுதிப்போட்டியில் தோல்வியடையும் அணிக்கு 2 மில்லியன் டொலர்கள் கிடைக்கும். அரையிறுதியில் தோல்வியடையும் அணிகளுக்கு தலா 08 இலட்சம் டொலர்கள் அளிக்கப்படும். குரூப் ஸ்டேஜில் வெளியேறும் அணிகளுக்கு தலா ஒரு இலட்சம் டொலர்கள் அளிக்கப்படும். அதேபோல் குரூப் ஸ்டேஜில் ஒவ்வொரு வெற்றிக்கும் தலா 40,000 டொலர்கள் வழங்கப்படும்.

........................

பங்களாதேஷுக்கு எதிரான முதல் ஆட்டம் மழையினால் கைவிடப்பட்ட நிலையில், 2ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 86 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. முதலில் பேட் செய்த நியூசிலாந்து 254 ரன்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 41.1 ஓவர்களின் முடிவில் 168 ரன்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. சிறப்பாக பந்துவீசிய ஈஷ் சோதி 06 விக்கெட்டுகளை கைப்பற்றி ஆட்டநாயகன் விருது வென்றார்.

........................

பிரான்ஸில் நடைபெற்றுவரும் றக்பி உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற 03 ஆட்டங்களில், ஜோர்ஜியா - போர்த்துக்கல் அணிகளுக்கிடையிலான ஆட்டம் 18:18 என்ற புள்ளிகள் கணக்கில் சமநிலையில் நிறைவடைந்தது. இங்கிலாந்து - சிலி அணிகள் மோதிய ஆட்டத்தில் இங்கிலாந்து 71:00 என்ற புள்ளிகள் கணக்கில் அபார வெற்றியீட்டியது. அயர்லாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் 13:8 என்ற புள்ளிகள் கணக்கில் அயர்லாந்து வெற்றியீட்டியது.

# Nestomalt Cycling challange 2023

## ஆடவருக்கான ஜூனியர் பிரிவில் மக்கி முதலிடம்

நெஸ்லே நெஸ்டமோல்ட் அனுசரணையில் நெஸ்டமோல்ட் சைக்கிளிங் செலஞ்ச் - 2023 சைக்கிளோட்டம் நேற்று கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் நடைபெற்றது.

இதில் 650க்கு மேற்பட்ட சைக்கிள் ஓட்ட வீரர்கள் பங்குபெற்றி தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற குறித்த சைக்கிளோட்டத்தில் 28 கிலோமீற்றர் தூரத்தை கொண்ட ஆடவருக்கான இளையோர் சைக்கிள் ஓட்டத்தில் கதிரண ஸ்பீட் சைக்கிளிங் கழகத்தை சேர்ந்த எஸ்.எஸ்.எச். மக்கி முதலிடத்தை கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார். இரண்டாவது இடத்தை களனிய சைக்கிளிங் கழகத்தைச் சேர்ந்த எம்.ஏ.எச்.எஸ். சமரவீர பெற்றுக்கொண்டதுடன், மூன்றாம் இடத்தை வென்னப்புவ சைக்கிளிங் கழகத்தைச் சேர்ந்த எம்.டி.டி.பெரேரா பெற்றுக் கொண்டார்.

சம்பியன் பட்டத்தை பெற்ற எஸ்.எஸ்.எச். மக்கி போட்டி தூரத்தை 43 நிமிடங்கள் 49 செக்கன்களில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். இரண்டாவது இடத்தை பிடித்த எம்.ஏ.எச்.எஸ். சமரவீர 44 நிமிடங்கள் 8 செக்கன்களில் பந்தய தூரத்தை கடந்தார்.

பரிசளிப்பு நிகழ்வில் நெஸ்லே நிறுவனத்தின் பிரதி தலைவர் பந்துல கொடகே, நெஸ்லே நிறுவனத்தின் விற்பனை பணிப்பாளர் ஜெகத் வெடகே, நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பெர்னாட் ஸ்டீபன், இலங்கை சைக்கிளிங் கூட்டமைப்பின் தலைவர் அமல் ஹர்ஷன டிசில்வா, விளையாட்டு அமைச்சின் மேலதிக பணிப்பாளர் ரோஹண




டி சில்வா, இலங்கை சைக்கிளிங் கூட்டமைப்பின் செயலாளர் நளின் அதிகாராச்சி, டேரி நெஸ்லே நிறுவனத்தின் பணிப்பாளர் ருவான் வெலிகல ஆகியோர் கலந்து கொண்டனர்.




## கிரிக்கெட் வரலாற்றில் இரண்டாவது அணியாக இடம்பெற்ற இந்தியா



அவுஸ்திரேலிய அணியுடனான முதல் ஒருநாள் போட்டியில் வெற்றியீட்டிய இந்திய அணி ஒருநாள் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்தது. ஏற்கனவே இந்திய அணி, டெஸ்ட் மற்றும் ரி20 வடிவங்களில் முதலிடத்தில் உள்ளது. இந்த நிலையில், மூன்று வடிவங்களிலும் இந்திய அணி முதலிடத்தை பிடித்து சாதனை படைத்தது.

இந்த அரிய நிகழ்வின்மூலம், கிரிக்கெட் வரலாற்றில் மூன்று வடிவங்களிலும் முதலிடத்தை பிடித்த உலகின் இரண்டாவது அணி என்ற பெருமையை இந்திய அணி பெற்றுள்ளது. இந்தியாவுக்கு முன் தென்னாபிரிக்க அணி மட்டுமே இந்த சாதனையை செய்திருக்கிறது. 2012இல் தென்னாபிரிக்க அணி மூன்று கிரிக்கெட் வடிவங்களிலும் முதலிடத்தில் இருந்தது.

முதலிடத்தில் காணப்பட்ட பாகிஸ்தான் அணி தற்போது இரண்டாவது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளது.

# மாகாண மெய்வல்லுனர் போட்டியில் ஒலுவில் ஹம்ராவுக்கு தங்கம்

அட்டப்பள்ளம் செய்தியாளர், எம்.ஜே.எம். வலீத்

மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் ஒலுவில் அல்-ஹம்றா மாணவன் தங்கப் பதக்கம் வென்று சாதனை நிலைநாட்டியுள்ளார்.

கந்தளாயில் நடைபெறும் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டி - 2023 இல் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவனான எம்.ஏ.ஆர்.ஹாபீஸ் ரய்ஹான் 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 1ஆம் இடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை வென்றார். இம் மாணவன்




60 மீற்றர், 100 மீற்றர் ஓட்ட நிகழ்ச்சிகளில் முறையே 2ஆம், 3ஆம் இடங்களையும் பெற்றுள்ளார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# இலங்கையில் நடைபெறும் உலகக்கிண்ண தொடருக்கான அட்டவணை வெளியீடு

இலங்கையில் அடுத்த ஆண்டு ஜனவரி 13 முதல் பெப்ரவரி 4ஆம் திகதிவரை நடைபெறவுள்ள 15ஆவது 19 வயதுக்குட்பட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கை அணி முதல் போட்டியில் ஸிம்பாப்வே அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி கொழும்பு ஆர்.பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதேநேரம் நடப்பு சம்பியனான இந்திய அணி தங்களுடைய முதல் போட்டியில் பங்களாதேஷ் அணியை ஜனவரி 14ஆம் திகதி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் எதிர்கொள்ளவுள்ளது.

குறித்த தொடரில் 16 அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இலங்கையில் மூன்று தடவைகள் 19 வயதின் கீழ் உலகக்கிண்ணம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் 10 நாட்கள்
ICC MEN'S CRICKET WORLD CUP INDIA 2023




மருதமுனை ஜமைக்கன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஒருவருட நிறைவை முன்னிட்டு அண்மையில் மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டியில் மிமா விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி பென்சின் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. படம்: மருதமுனை நிருபர்



19ஆவது ஆசிய விளையாட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சீனாவின் ஹாங்சூ நகரில் கண்கவர் கலை நிகழ்வுகளுடன் ஆரம்பமானது. ஆரம்ப விழாவில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் கலந்து கொண்டார். இதைத் தொடர்ந்து போட்டியில் கலந்து கொள்ளும் நாடுகளின் தேசிய கொடியை அறிமுகப்படுத்தும் நிகழ்வு நடைபெற்றது. எதிர்வரும் 8ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7